உணவு நெருக்கடி வருமென்று கம்யூனிஸ்டுக் கட்சி முன்னமேயே எச்சரித்தது

காங்கிரஸ் சர்க்கார் வாளாயிருந்துவிட்டது

மதுரையில் தோழர் ராமமூர்த்தி கண்டனம்

கேரள கம்யூ. சர்க்காரின் முன்மாதிரிக்கு பாராட்டு

மதுரையில் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடந்தன

உணவு நெருக்கடி வருமென்று மூன்று வருஷங்களுக்கு முன்பே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரித்தது. ஆனால் காங்கிரஸ் சர்க்கார்கள் ஆவனசெய்ய முயலாமல் நெருக்கடியை வளரவிட்டதென்று தோழர் பி. ராமமூர்த்தி மதுரையில் நடந்த கூட்டத்தில் சர்க்காரை வன்மையாகக் கண்டித்தார்.

உணவு நெருக்கடியைச் சமாளிப்பதில் கேரள கம்யூனிஸ்ட் சர்க்காரின் முன் மாதிரியை அவர் விளக்கினர். சென்னை உள்பட இதர ராஜ்யங்களில் காங்கிரஸ் சர்க்கார்கள் மக்கள் எக்கேடு கெட்டாலும் போகட்டும், சர்க்காருக்கு வேண்டுவது வருமானமே என்ற முறையில் நடந்து வருவதையும் ராமமூர்த்தி சுட்டிக்காட்டினர்.

மதுரை, டிச. 6—

இன்று மதுரையில் மதுரை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக மதுரை பஞ்சாலைத் தொழிற் சங்கம், மதுரை மோட்டார் லேபர்ஸ் யூனியன், மதுரை ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன், மதுரை முனிசிபல் தொழிலாளர் சங்கம், மதுரை பிரிண்டிங் அன்ட் பைண்டிங் தொழிலாளர் சங்கம் மற்றும் ஏனைய தொழிற் சங்கங்களும் சேர்ந்து இன்று காலை 11 மணிக்கு ஊர்வலமும், மாலை 7 மணிக்கு பொதுக்கூட்டமும் நடத்தினர்கள்.



ஊர்வலம்

மதுரை டவுன் ஹால்ரோட்டிலிருந்து ஷ தொழிற் சங்கத்தின் சார்பாக ஊழியர்களும் தொழிலாளர்களும், ஏனைய பொதுமக்களும் சுமார் 2000 பேர்கள் கொண்ட ஊர்வலமானது இன்று காலை 11 மணிக்குப் புறப்பட்டது. ஊர்வலத்தில் செங்கொடிகள் பிடித்து தொழிலாளர் அணி வகுத்துச் சென்றது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அவர்களது ஆர்ப்பாட்டமும், கோஷங்களும் மதுரை நகர் அதிரும்படி ஓசைகேட்டன. இதில் ஆச்சரியப் படத் தக்கது என்னவெனில் சுமார் 500 பெண்கள் ஊர்வலத்தில் ஆண்களுக்கு சரி நிகராக செங்கொடி யேந்தி வந்ததாகும். ஊர்வலத்தில் வரும்பொழுது "உணவு விலையைக் கட்டுப் படுத்து"; மலிவு தான்யக் கடைகளைத் திற"; "உணவுப் பொருள்களின் மீது பாங்குதாரர்கள் கடன் கொடுப்பதை நிறுத்து" என்பன போன்ற கோஷங்களை எழுப்பிக் கொண்டு வந்தார்கள். இந்த ஊர்வலமானது தெற்குமாசி வீதி, கடந்த 1 வருட காலமாக ஊர்வலமே போகாத வீதியான கீழ மாசி வீதி, கப்பாலம் வழியாக மதுரை கலெக்டர் ஆபீஸை அடைந்தது. கலெக்டர் ஆபீஸை அடைந்ததும் ஊர்வலத்தில் வந்தவர்கள் அப்படியே ஆபீஸ் முன் உட்கார்ந்து கொண்டார்கள்.

மதுரை கலெக்டரிடம் மகஜர் சமர்ப்பித்தல்:

பிறகு தொழில் சங்கத் தலைவர்களும் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் மதுரை கலெக்டர் திரு. பாலசுப்ரமண்யத்தைப் பேட்டி கண்டு சுமார் 40 ஆயிரம் பேர்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தார்கள். கலெக்டரைப் பேட்டி கண்டவர்கள்: மதுரை தாலூகா விவசாய சங்கத் தலைவர் தோழியர் கே. பி. ஜானகி அம்மாள், மதுரை மோட்டார் லேபர்ஸ் யூனியன் பொதுக் காரியதரிசி பி. தண்டபாணி, மதுரை கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி ஏ. பி. பழனிச்சாமி, மற்றும் பஞ்சாச்சரம், குருசாமி, எம். முனியாண்டி முதலியோர்களும் மதுரை நகர் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களான எஸ். பி. ஆண்டி, சோ. கருப்பையா, எஸ். காமராஜ், எம். மதுரை வீரன் ஆகியோர்களும் பேட்டி கண்டனர். இவர்கள் கொடுத்த மகஜருக்கு கலெக்டர் பதிலளிக்கையில் அரசாங்கத்திடமிருந்து நியாயவிலைக் கடைகள் திறக்க வேண்டுமென்று உத்திரவு வரவில்லை, வந்தால் தான் செய்யத் தயாராக இருப்பதாயும். அரசாங்கம் ஆணையிடாமல் தானாக ஏற்பாடு செய்வதற்கு முடியாதென்றும். சட்டம் இல்லையென்றும், மகஜரை தான் அரசாங்கத்திற்குத் தெரிவித்து அரசாங்கம் ஏதாவது தகவல் தெரிவித்தால் அதைத் தெரிவிப்பதாகவும், நியாயவிலைக் கடைகள் திறக்க வேண்டுமென்று உத்திரவு வந்தா[l] உடனே ஏற்படுத்துவதாகவும், இப்பொழுது தன்னால் செய்வதற்கு சட்டமில்லையென்றும் கூறினர். இதைத் தொடர்ந்து ஏ. பி பழனிச்சாமி கூறுகையில் சென்னை திருச்சி போன்ற நகர்களிலெல்லாம் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன வென்றும், மதுரையில் தொழிலாளர்களும் ஜனத் தொகையும் அதிகமிருப்பதால் உணவு நெருக்கடியைப் போக்குவதற்கு நியாயவிலைக் கடைகள் அவசியமென்றும் கூறினர். அடுத்தாற்போல் தோழியர் கே. பி. ஜானகியம்மாள் கூறுகையில் கடந்த 2 மாத காலமாக படி அரிசி ரூ. 1-1-0 லிருந்து தற்பொழுது ரூ. 1-5-0 வரைக்கும் உயர்ந்துவிட்டது. இதனால் சாதாரண மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்றும் இதற்கு இயன்ற முயற்சியை செய்ய வேண்டுமென்றும், இதுவரை மக்கள் மிகப் பொறுமையாக இருந்து வந்தார்கள் என்றும் இனிமேலும் இந்த உணவு நெருக்கடியைச் சமாளிக்க முடியாதென்றும். உணவுக் கஷ்டம் எல்லை மீறிவிட்டதென்றும் கூறினர். அதற்கடுத்தாற்போல் பி. தண்டபாணி தனது கருத்தைக் கூறுகையில் இந்த உணவு விலை ஏற்றத்தால் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்றும், ஆனால் அரசாங்கமோ, தனிப்பட்ட பெரு முதலாளிகளோ தொழிலாளர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் எவ்விதமான சம்பள உயர்வோ, பஞ்சப்படி உயர்வோ கொடுக்கவில்லையென்றும் இதனால் பழைய சம்பளத்தை வைத்துக்கொண்டு இப்புதிய உணவு விலையேற்றத்தை சமாளிக்க முடியவில்லையென்றும், இதைப் பார்த்து தொழிலாளர்களின் நலன் கருதியாவது தங்களாலான முழு முயற்சி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இறுதியாக எஸ். பி. ஆண்டி தனது வேண்டுகோளில் கலெக்டர் பார்த்து அரசாங்கத்திற்குத் தெரிவித்தால் ஏதாவது அனுகூலம் உண்டாகும் என்றார். மதுரை ஜில்லாவிலிருந்து எந்தவிதமான உணவு நெருக்கடிப் பிரச்னையும் தங்களுக்கு வரவில்லை அதனால் அதற்கான ஏற்பாடு செய்யவில்லை; மற்ற ஜில்லாக்களிலிருந்து உணவு சம்பந்தமான பிரச்னை வந்தது அதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கிறோம்" என்று அரசாங்கம் கூறுகிறதாகையால் இங்கிருக்கும் உணவு நெருக்கடியையும், விலைவாசியை கூர்ந்து கவனித்து அரசாங்கத்திற்குத் தெரிவித்து ஆவன செய்யும்படி கலெக்டரை வேண்டினர்.

இதற்கெல்லாம் கலெக்டர் இறுதியாக பதிலளிக்கையில் தனக்கு இதுவரை உணவுப் பொருள்கள் விலை சம்பந்தமான உத்தரவு எதுவுமே வரவில்லையென்றும் இனிமேல் தான் அரசாங்கத்திற்குத் தெரிவித்து அதற்காவன செய்வதாகவும் அரசாங்கம் ஆணையிட்டவுடன் ஆவன செய்யத் தயார்" என்று கூறிமுடித்தார்.

பேட்டி முடிந்தவுடன் தாங்கள் கலெக்டரிடம் என்ன கூறினோம் கலெக்டர் என்ன பதில் கூறினார் என்பதை பி. தண்டபாணி ஊர்வலத்தில் கலந்துவந்து கலெக்டர் ஆபீஸ் முன்பு அமர்ந்திருந்த மக்களிடம் தெரிவித்தார். இத்துடன் ஊர்வலம் கலைந்தது.

பொதுக்கூட்டம்

அன்று இரவு 7 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெற்றது இக்கூட்டத்திற்கு மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி வி. கார்மேகம் தலைமை வகித்தார். கூட்டத்திற்கு ஏராளமான பொதுமக்களும், திரளான தொழிலாளர்களும் வந்திருந்தார்கள். சுமார் 5000 பேர்கள் கூட்டத்தில் குழுமியிருந்தார்கள். ஆரம்பத்தில் தலைவர் வி. கார்மேகம் பேசுகையில், கூட்டமானது உணவு விலையேற்றத்தைக் கட்டுப்படுத்தி நியாயவிலைக் கடைகளைத் திறக்கக்கோரி சென்னை அரசாங்கத்திடம் மகஜர் ஒன்று அனுப்பியும், இம்மாதிரியான ஊர்வலம் பொதுக்கூட்டமும் தமிழ்நாடு பூராவிலும் நடப்பதுபோல மதுரையிலும் நடத்தப்படுகிறது என்றுகூறி கீழ்க்கண்ட சில தீர்மானங்களை வாசித்தார்.

தீர்மானங்கள்

1. மதுரை நகரை தற்பொழுதிருந்துவரும் 33 வார்டுகள் 36 உறுப்பினர்களிலிருந்து, 42 வார்டுகள் 52 உறுப்பினர்கள் என்று பிரிப்பதற்கு சென்னை அரசாங்கத்திடம் இக்கூட்டம் வேண்டிக் கொள்கிறது.

2. மதுரை நகரில் நகரசபைக்குச் சொந்தமான பொதுவான குளிக்கும் அறையை நகரசபைத் தலைவர் தன் சொந்த உபயோகத்தைக் கருதி தன் சகோதரி வீட்டோடு சேர்த்திருப்பதைக் கண்டித்து அதை உடனே பொது மக்களின் உபயோகத்திற்கு மாற்றவேண்டுமென்று இக் கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

3 கைத்தறி தொழிலாளர்கள் 'ரிபேட்' என்ற முறை இருப்பதால் தங்கள் தொழில் பாதிக்கப்பட்டு அவதிப்படுகிறார்கள், இதை உடனே அரசாங்கம் போக்கி நெசவாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டும்.

4. சரோஜா வீவிங் மில்லில் ஒரு தொழிலாளியை காரணமில்லாமல் வேலையிலிருந்து நீக்கியதால் அதைக் கண்டித்து தொழிலாளியை வேலையில் திரும்ப சேர்க்க வேண்டும் என்று கோரி ஏனைய தொழிலாளர்கள் 1-12-58 லிருந்து உள்ளிருப்பு வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். இதை விசாரித்து நடவடிக்கை எடுப்பதற்கு மதுரை லேபர் ஆபீஸர் தயங்குகிறார். ஆதலால் அரசாங்கம் இதை உடனே கவனித்து இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது. இத்தீர்மானத்துக்கு மக்கள் ஆதரவு தர வேண்டுமென்று கேட்டதற்கு கூட்டத்திலிருந்து பலத்த கர கோஷம் எழுந்தது.

500 குடும்பங்களுக்கு ஒரு மலிவு கடை

அடுத்தபடியாக மதுரை கம்யூனிஸ்ட் கட்சி காரியதரிசி பேசுகையில் "இந்த உணவு விலையேற்றத்தைக் கண்டித்து, நியாய விலை கடைகள் திறக்க வேண்டுமென்று கோரி தமிழ்நாடு பூராவிலும் இன்று ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெறுகிறது. இதே உணவு நெருக்கடி ஒரு பொதுப் பிரச்னையாகும். இதில் சர்வ கட்சியும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும், இதை அரசாங்கத்திற்குத் தெரிவித்து அதற்கான வற்றைச் செய்வதற்கு கட்சி கண்ணோட்டமின்றி முன்வர வேண்டும் என்று கூறினர். மேலும் இன்று காலை கலெக்டரிடம் கொடுத்த மகஜர் பற்றியும், அதற்கு கலெக்டர் கொடுத்த பதிலையும் கூறி இந்தப் பதிலிலிருந்து கலெக்டர் இந்தப் பிரச்சினையில் அக்கறை கொள்ளவில்லை என்பது தெரிகிறது என்று கூறிவிட்டு உணவுப் பிரச்சினை சம்பந்தமான தீர்மானங்களை வாசித்தார்,

1. 500 குடும்பங்களுக்கு ஒரு மலிவு தான்யக் கடை வீதம் நகர் முழுவதிலும் கடைகள் திறக்கப் படவேண்டும். ஒவ்வொரு குடும்பத்திற்கும் அடையாளக் கார்டுகள் வழங்கி, வசதியானக் கடைகளில் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

2 அரிசி பட்டணம் படி 1க்கு 12 அணு வீதமும் நவதான்யங்கள் ரூ, 1க்கு 3 படி வீதமும் தட்டின்றி கொடுக்க வேண்டும்.

3. மலிவு தான்யக் கடைகளின் தேவைக்குப் பெரு மிராசுதார்கள் ரைஸ் மில்களில் ஸ்டாக் வைத்திருக்கும் வியாபாரிகள் வசமுள்ள உணவுப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்து சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும். இதனால் ஏற்படும் நஷ்டத்தை மேற்குறிப்பிட்டவர்களுக்கு சர்க்கார் மான்யம் கொடுக்க வேண்டும்.

4. அடுத்துவரும் அறுவடை காலத்தில் திட்டமிட்டு கொள்முதல் செய்யவும், விநியோகிக்கவும், அரசியல் கட்சிகள், வெகுஜன ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளையும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும் கொண்ட கமிட்டி அமைக்கவேண்டும்.

தோழர் ராமமூர்த்தி பிரசங்கம்

அடுத்தபடியாக தோழர் பி. ராமமூர்த்தி பேசுகையில், கடந்த மூன்று வருடத்திற்கு முன்பாகவே நிச்சயம் உணவு நெருக்கடி வரும் என்று கம்யூனிஸ்ட் கட்சி முன்னமேயே சொன்னது, அதனால் மக்களும் தொழிலாளர்களும் அவதிப்படுவார்கள் அதனால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும் எச்சரித்தோம். ஆனால் அன்றிலிருந்து இன்று வரை இந்தப் பிரச்சினையைப் பற்றி ஆளும் கட்சியினரும். அமைச்சர்களும் கவனிக்கவில்லை. இனிமேல் உணவு விலையேற்றத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், தஞ்சாவூர் நெல் அறுவடையானதும் உணவு விலை இறங்கிவிடுமென்றும் ஒன்றும் கவலைப்பட வேண்டாமென்றும் உணவு மந்திரி கூறுகிறார்! கடந்த 3 வருடமாக அப்படியேதான் சொல்லி வருகிறார். ஆனால் உணவு விலை நாளுக்குநாள் ஏறுகிறதே தவிர இறங்கவில்லை. நியாய விலைக் கடைகளைத்திறந்து படி அரிசி 12 அணுவுக்குக்கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கான அரிசியை பெரிய நிலச்சுவான்தார்களிடமிருந்துகொள்முதல் செய்ய வேண்டும். வியாபாரிகள் மூலம் கொள்முதலை அனுமதித்தால் அவர்கள் இஷ்டம்போல் கொள்முதல் செய்து அதிக விலைக்கு விற்று விடுகிறார்கள். அதிக விலையில் சர்க்காரே அரிசி கொள்முதல் செய்து மக்களுக்கு குறைந்த விலையில் விற்கவேண்டும். இதற்கான நஷ்டத்தை சர்க்காரே ஏற்றுக்கொள்ளவேண்டும். டி. டி. கிருஷ்ணமாச்சாரி டில்லி பார்லிமெண்டில் வரிவிதிப்பை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் மற்றும் இந்த வரியில் 25 கோடி ரூபாய் உணவுப் பிரச்சினையைத் தீர்த்து மக்களுக்குத் தட்டின்றி உணவு கிடைக்க ஏற்பாடு செய்ய ஒதுக்கி வைத்திருக்கிறோமென்றும் இதில் ஏற்படும் நஷ்டத்தை மாகாண சர்க்காருக்கு மான்யம் கொடுத்தாவது காப்பாற்றுவோம் என்றும் பகிரங்கமாக உரைத்தார். இன்று சர்க்கார் அவ்வாறு செய்கிறதா? செய்யவில்லை. சொன்ன வாக்கை நிறைவேற்றத் தவறிவிட்டது. சென்னை சர்க்காரும் ஏன் மத்திய சர்க்காரிடம் இதுபற்றி கேட்கவில்லை. பிரதமர் நேருவும் கவனிக்கவில்லை. உணவுப் பிரச்சினை கடுமையாகிவிட்டது. அதைத் தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் இனிமேல் செய்வதென்று கூறுகிறார் நேரு. இப்பொழுதுதான் எல்லா மந்திரிகளுக்கும் உணர்வு வந்திருக்கிறது. ஆனால் அதற்கான ஏற்பாட்டை இன்னும் செய்யவில்லை.

கேரளத்திற்கு ஓரவஞ்சனை

தஞ்சாவூரில் விளையும் நெல்லை கேரளத்திற்கு ஏன் அனுப்புகிறீர்கள் என்று மந்திரி பக்தவத்சலத்திடம் கேட்டால் அந்த அரிசியை யார் சாப்பிடுவார்கள் என்று பதிலளிக்கிறார். இதிலிருந்து இவர்கள் கேரளத்திற்கு காட்டும் ஓரவஞ்சம் நன்கு விளங்குகிறது. கேரளம் நம் சென்னை மாகாணத்தைவிட ஜனத்தொகையிலும், பொருளாதாரத்திலும் மிகக் குறைந்தது. அப்படியிருந்தும் அங்கு உணவுப் பிரச்சினையை சர்க்கார் சமாளிக்கிறது. மேலும் கேரளத்தில் பெரும்பாலும் மலைபடு பொருள்களான தேயிலை, ஏலக்காய், கிராம்பு, மிளகு போன்ற பொருள்களை உற்பத்தி செய்வதால் உணவுப்பொருளான அரிசி விளைவு மிகக்குறைவு. அதனால்தான் அதுவெளியிலிருந்து அரிசி வாங்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. கேரளத்தில் மேலே குறிப்பிட்ட பொருள்கள் விளைவதால் அவற்றை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதனால் நம் அரசாங்கத்திற்கு நிறைய லாபம் கிடைக்கிறது. அந்த லாபம் பாதிக்கப்பட்டால் நம் நாட்டின் பொருளாதாரம் அதிக அளவு பாதிக்கப்படும். நமக்கு வேண்டிய இயந்திரங்களும் இறக்குமதி செய்ய முடியாது. பண்டமாற்று முறையில் நாம் ஒரு பொருள் கொடுத்து நமக்குத் தேவையான மற்ற பொருள்கள் வாங்குகிறோம் அதேபோல் நம் நாட்டில் விளையும் நெல்லை கேரளத்திற்கு ஏற்றுமதி செய்து அந்த ராஜ்யத்திலிருந்து நமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக்கொள்கிறோம்.

கேரளத்தின் நல்ல முன் மாதிரி

கேரளத்தில் மலிவு தானியக் கடைகள் வைத்து அதிக விலையில் உணவுப் பொருள்களை வாங்கி குறைந்த விலையில் மக்களுக்கு தானியங்களை விநியோகிக்கிறார்கள், அதில் ஏற்படும் நஷ்டத்தை சர்க்காரே ஏற்றுக்கொள்கிறது. கேரளத்திற்கு வேண்டிய 10 லட்சம் டன் நெல்லில் 3 லட்சம் டன் நெல்லை நியாயவிலைக் கடைகளின் மூலம் மக்களுக்கு விநியோகிக்கிறது. தென் மண்டலம் என்ற ஸ்தாபனத்தை ஏற்படுத்தி மூட்டை 32 ரூபாய்க்கு கொள்முதல் செய்கிறது ஆந்திராவில். இதில் 3 லட்சம் டன் நெல்லை மத்திய சர்க்கார் சுப்பேதேவையை பூர்த்தி செய்ய என்று கூறி எடுத்துக் கொண்டு போய்விட்டது. தஞ்சாவூரிலிருந்து பெரும் முதலாளிகள் நெல்லை கொள்முதல் செய்து ஸ்டாக் வைத்திருந்து பிறகு அதிக விலைக்கு விற்கிறார்கள். ஆந்திர மந்திரி திம்மையா மூட்டை 1-க்கு 32 ரூ வீதம் கொடுத்து வாங்கி தங்கள் நாட்டில் மூட்டை 1-க்கு 42 ரூ விற்கிறார்கள்.

காங்கிரஸ் ஆட்சியின் போக்கு

மக்கள் எக்கேடு கெட்டுப் போனாலும் போகட்டும், நமக்கு வேண்டியது வருமானம் இது தான் காங்கிரஸ் ஆட்சியில் நடப்பது. மந்திரிகளின் கொள்கையும் அதுவே. கேரள கம்யூனிஸ்ட் சர்க்கார் மக்கள்நலனேசர்க்காரின் நலன், தொழிலாளர்களின் சுபீட்சமே தன் சுபீட்சம் எனப்பேணி ராஜ்யத்தைக் காக்கவும் மக்களைக் காக்கவும் வந்துள்ளோம் என நினைத்து ஆட்சி நடத்துகிறார்கள். இப்பொழுது உணவுப் பிரச்சினையைத்தீர்க்கஉணவுப்பொருள்களை விற்பதற்கு "லைசென்ஸ்" வழங்குவதாக மத்திய அரசாங்கம் தெரிவித்திருக்கிறது. இதனால் பெரும் வியாபாரிகள் கொள்ளை அடிப்பதற்கான சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகையால் 'லைசென்ஸ்' வழங்குவதில் ஆலோசனை செய்து கமிட்டிகளின் மூலம் யாருக்கு லைசென்ஸ் வழங்குவது எனத் தீர்மானிக்க வேண்டும். குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அதே விலைக்கு நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். அரசாங்கம் விதிப்பதற்கு குறைவாக நெல் கொள்முதல் செய்வதை கவனித்து அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். லைசென்ஸ் வாங்கிய ஏஜெண்டுகளை கண்காணித்து நிர்வாகம் சரிவர நடக்கிறதா என்று அரசாங்கம் கவனித்து வர வேண்டும். ஏஜெண்டுகளின் கணக்கு, கொள்முதல் செய்யும் விபரங்கள் முதலியவற்றை பரிசீலிக்க வேண்டும்.

பிரதமர் நேரு சொன்னது பொய்யாயிற்று

நேருஜி போன வருடம் ரேடியோவில் பேசும் போது "இனி வருகிற 1 வருடத்திற்குள் உணவு நிலை சரியாகிவிடும், இனி 1 படி அரிசிகூட அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்க மாட்டேன்'' என்று கூறினார், இப்பொழுது என்ன வாயிற்று?

இப்பொழுது காங்கிரஸ் அரசாங்கம் தனக்கு எதிராக கம்யூனிஸ்ட் சர்க்கார் கேரளத்தில் ஆட்சி நடத்துவதை ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு சட்டம், ஜனநாயகம், மக்கள் உரிமை ஆகிய எல்லாவற்றையும் புறக்கணித்து நடக்கிறார்கள், கேரள சர்க்காருக்கு எதிரிடையாக மக்களைத் தூண்டிவிட்டு மக்களுக்கு கேரள சர்க்காரின் மீது அருப்தி ஏற்படும்படியான சூழ்நிலைகளை மத்திய சர்க்காரும் அதற்கு துணையாக ஏனைய மாகாண சர்க்காரும் செய்து வருகின்றனர்,

அடுத்தாற்போல் மில் பிரச்சினையைப்பற்றியும், பாகிஸ்தான் இராணுவ ஆட்சியைப் பற்றியும், அதற்குக் காரணமான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அட்டூழியங்களைப்பற்றியும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு நம் இந்திய சர்க்கார் கொண்டுள்ள தொழில், பொருளாதார தொடர்பு பற்றியும், அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தியாவுக்கு உதவிசெய்ய முன்வருவதின் நோக்கத்தைப் பற்றியும், அதன் நிபந்தனைகளைப்பற்றியும், அமெரிக்கா இதுவரை கடன் கொடுத்து நாடுகளை படுத்தியபாட்டைப்பற்றியும், இதற்கு உதாரணமாக எகிப்து சம்பவத்தைப் பற்றியும், சூயஸ் கால்வாய் பிரச்சினையை பற்றியும், நாசரின் உறுதியுள்ளத்தைப் பாராட்டியும், மேற்படி அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு இந்தியா தொடர்புகொள்வதுபற்றி கம்யூனிஸ்ட் கட்சி என்ன கூறுகிறதென்று அதனோடு கொண்டுள்ள தொழில், பொருளாதார தொடர்பைவிட்டு சோவியத் ரஷ்யா, சீனு போன்ற நாடுகளிடம் மேற்படி தொடர்புகளைக் கொள்ள வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சி வற்புறுத்துவதின் நோக்கத்தைப்பற்றியும், இதனால் இந்தியா அடைந்திருக்கும், அடையப்போகும் நன்மை, முன்னேற்றங்கள் பற்றியும் தோழர் இராமமூர்த்தி விவரித்தார்.

மக்களும் தொழிலாளர்களும் ஒன்றுசேர்ந்து, இப்பொழுது உலகில் முன்னணியில் வந்துகொண்டிருக்கும் ரஷ்யா, சீனு போன்ற நாடுகளைப்போல் முன்னேறி ஒரு பெரும் சோஷலிஸ சமுதாயத்தை இந்தியாவில் அமைக்க பாடுபடவேண்டுமென்றும், இந்த உணவுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கட்சி பாகுபாடின்றி எல்லோரும் ஒத்துழைக்க வேண்டுமென்றும் கூறி முடித்தார். வி. கார்மேகம் நன்றி கூறினர். (ந. கி.

காரைக்குடி தேர்தல் வழக்கு

மதுரை, டிச. 4—

காரைக்குடி தொகுதியிலிருந்து சென்னை சட்டசபைக்கு காங்கிரசு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. எம். ஏ. முத்தையா செட்டியாரின் தேர்தல் செல்லாதென அறிவிக்குமாறு திரு. சா கணேசன் தொடர்ந்துள்ள வழக்கு மதுரை தேர்தல் மன்றத்தில் மன்ற நீதிபதி திரு பி. கே சுப்பிரமண்ய அய்யர் முன்பு இன்று தொடர்ந்து நடைபெற்றது. இன்றும் எதிர் மனுதாரின் சார்பில் மதுரை வழக்கறிஞர் திரு ஹரிஹர அய்யர் தொடர்ந்து வாதம் நடத்தினர். அவர் தமது வாதத்தில் கூறியதாவது:—

பெரியகோட்டை கிராம மக்களின் நலனுக்காக எதிர்மனுதார் பணம் கொடுத்ததாகக் கூறுவது தவறு என்றும், எதிர்மனுதார் கொடுத்தார் என்பதற்கு மனுதாரின் சார்பில் சாட்சியம் அளித்தவர்கள் மேற்படி பெரியகோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றும், ஆகையால் அவர்களின் சாட்சியம் நம்பத்தக்கவை யல்லவென்றும், வாதாடினர்.

மறுப்பு

மேலும் தொடர்ந்து வாதாடுகையில் பனங்குடியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தைப் பற்றியும், அங்கு எதிர் மனுதார் கிராம நலனுக்கு ரூ. 5000 தருவதாகவும் அங்கு கூடியுள்ள மக்கள் அங்குள்ள கோவிலின் முன்பு வாக்குறுதி அளிக்குமாறு எதிர் மனுதார் வேண்டியதாகவும் மனுவில் கூறப்பட்டிருப்பது தவறு என்றும், மேற்படி பனங்குடி கிராமத்திலுள்ள அலங்கார மண்டபத்தில் கூட்டப்பட்ட கூட்டத்தில் எதிர் மனுதார் பொதுமக்களிடம் மேற்கண்டவாறு கூறி வாக்குறுதியளிக்கும்படி கூறியதாக மனுதார் தரப்பு சாட்சிகள் முரண்பட்ட காலங்களைக் குறிப்பிட்டார்களென்றும், ஆகையால் மனுதார் தரப்பில் சாட்சியமளித்த திரு. சிவலிங்கம் செட்டியார் மற்றும் இது பற்றி கூறிய மனுதார் தரப்பு சாட்சிகள் இக் கூட்டம் நடந்திருந்த சமயம் பனங்குடிக்குப் போனது கிடையாதென்றும், மேலும் அலங்கார மண்டபத்தில் சடவுள் இல்லாததால் அங்கு பொதுமக்களை கடவுளின் பேரில் தனக்கு வாக்களிச்சு மாறு எதிர்மனுதார் வேண்டிக கொண்டதாகக் கூறுவது தவறு என்று வாதித்தார்.

மித்ராவயல் கிராமப் பொது மக்களுக்கு எதிர்மனுதார் ரூ 5000 கிராம நலனுக்காகக் கொடுத்தார் என்று சாட்சியமளித்த மனுதாரின் சாட்சிகள் ஒருவர்கூட மித்ராவயல் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அல்லவென்றும் இக்குற்றம் ஆதாரமற்றதாகுமென்றும், திரு அழகு சுந்தரம் செட்டியார் எதிர் மனுதார் சார்பில் கூத்தலூருக்கும் கிரணிப்பட்டிக்கும் இடையிலுள்ள சாலையில் சரளை போடுவதற்குப் பணம் தருவதாக வாக்குறுதியளித்தார் என்றுகூறப்பட்ட மனுதாரின் சாட்சிகளான திரு பூவக்கோனுர், திரு. சின்னக் கருப்பமூப்பனுர், சுப்பையா ஆகியோர்களில் பூவக்கோனுர் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவரும், மனுதாரது தேர்தல் ஊழியருமாவார். இக்காரணத்தைக் கொண்டு தாங்கள் எதிர்மனுதாருக்கு வாக்களித்தோம், வாக்களிக்கவில்லை என இச்சாட்சிகள் விளக்கவில்லையாதலாலும், கூத்தலூரில் கூட்டம் நடந்த இடம் பற்றிய சாட்சியம் முரண்பட்டதாக இருக்கிறதென்றும் வாதாடினர்.

மேலும் தொடர்ந்து கூறுகையில் நெற்புகைபட்டி கிராமத்தில் சுவாமிநாதய்யரும், நாகலிங்கப் பிள்ளையும், வள்ளியம்மாள், சின்னையா சேர்வை ஆகியோர்களுக்குப் பணம் கொடுத்ததாகவும், வள்ளியம்மாள் பணம் வாங்கிக் கொண்டு எதிர்மனுதாருக்கு வாக்களிப்பதாக உறுதி கூறியதாகவும், அவருடைய கணவர் கண்டித்ததாகவும் கூறுவது தவறு என்றும், இந்நிகழ்ச்சிபற்றி வள்ளியம்மாளின் கணவர்தான் மனுதாரிடம் புகார் பண்ணியிருக்க வேண்டுமென்றும் ஆனல் சாட்சிகளான வள்ளியம்மாளும், சின்னையா சேர்வையும் மனுதாரிடம் இந்த செய்தியைச் சொன்னதாகக் கூறுவது நம்பத்தக்கதல்ல என்றும், நெற்புகைபட்டி கிராம நலனுக்காகவும், பொதுச் சத்திரம் கட்டுவதற்காகவும், சுவாமிநாதய்யர் ரூ 5000 கொடுப்பதாகவும் கிராம மக்கள் எல்லோரும் தனக்கே வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதாகவும், இதை கிராம மக்கள் எல்லோரும் ஏற்றுக்கொண்டதாகவும், ஆனல் மனுதாரின் 4,104-வது சாட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் கூறியுள்ள மனுதாரின் தரப்பு சாட்சிகள் இவ்விருவரும் எந்த விதமான சொத்துரிமையும் இல்லாதவர்கள். ஆகையால் இக்குற்றத்தை நிரூபிக்க போதிய ஆதாரங்கள் இல்லையென்றும் வாதாடினர்.

எதிர்மனுதாரின் வாதம் தொடர்ந்து வெள்ளிக்கிழமை நடைபெறும்.

பாலாறு பாசன விதிகள்

சென்னை, டிச. 7—

பாலாறு பாசன விதிகளைத் தளர்த்தும் உத்தரவு 1959 அக்டோபர் 5-ம்நாள் வரை நீடிக்கும் என்று அரசாங்கம் உத்திரவிட்டுள்ளது.

பாலாறு நீர் தாரைப் பகுதியில் புதிய பாசன அமைப்புகளை நிர்மாணிக்கக் கூடாதென்றும், தேங்கும் நீரின் அளவை அதிகரிக்கக் கூடிய விஸ்தரிப்பு வேலைகள்ளதையும் மேற்கொள்ளக் கூடாதென்றும் பாலாறு நீர்தாரை பகுதியில் நிலம் இருபோக நன்செய் புன்செய் நிலமெதுவும் நன்செய் நிலமாக மாற்றப்படக்கூடாது என்றும் ஒருபோக நன்செய் நிலமாக மாற்றப்படாதென்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது இவையே பாலாறு பாசன விதிகளாகும்.

அவ்வப்போது தண்ணீர் 'சப்ளை' நிலைமைக்கேற்ப அந்த விதிகளை அரசாங்கம் தளர்த்தி வந்துள்ளது. கடைசியாக 1957 அக்டோபரில் விதிகள் தளர்த்தப் பட்டன.

ஆணையாளருக்குப் பிரிவுபசாரம்

ஆரணி, டிச. 5—

ஆரணி நகர முன்னேற்றத்தில் ஆர்வங்கொண்டு, தயவு, தாட்சண்யமின்றி நேர்மையாக மாபெரும் பணிகள் பல புரிந்த ஆணையாளர் திரு. பி. சிவசுப்புதேவர் பி. ஏ. அவர்கள் அரக்கோணம் நகராட்சி மன்ற விசேஷ அதிகாரியாக மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு முனிசிபல் ஆசிரியர்களால் கொசப்பாளையம் உயர்தர ஆரம்பப் பாடசாலையில் பிரிவுபசாரக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. ஆணையாளரின் அஞ்சாநெஞ்சம், நடுநிலைமை, குற்றங் கடிதல், பேரன்பு முதலியவற்றைப் பற்றிப் பல பேர் பேசினர்கள்.

அம்மோனியா விநியோகம்

விவசாய சங்க நடவடிக்கைகள்

திண்டிவனம், டிச. 4—

திண்டிவனத்தில் அம்மோனியா விநியோக விஷத்தில் பல சிக்கல்கள் இருந்தன. இது சம்பந்தமாக விவசாய சங்கம் முன்கை எடுத்து கலெக்டருக்கு மகஜர் கொடுத்தது. கூட்டுறவு ஸ்டோர்கள் மூலம் விநியோகம் செய்யக் கோரியது. நெல் சாகுபடி நிலப்பரப்பு அடங்கிய அத்தாட்சிக் கடிதத்துடன் வருவோருக்கே விநியோகிக்கப்படும் என்ற தாசில்தார் உத்தரவை அமுல் நடத்தியதால் ஓரளவுக்கு உரம் கிடைத்தது.

விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

தஞ்சை டிச. 4—

தஞ்சையில் செயின்ட் பீட்டர்ஸ் உயர்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்தில் இம்மாதம் 2, 3 தேதிகளில் நடைபெற்ற மேற்குத் தஞ்சை மாவட்ட செகண்டரி பள்ளி விளையாட்டுப் போட்டியில் பரிசளிப்பு விழா நேற்று மாலை மேற்குத் தஞ்சை ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ ஏ ஜோஷுவா தலைமையில் நடைபெற்றது தஞ்சை மாவட்ட உடற் பயிற்சிக் கழகப் பொதுச் செயலாளர் திரு. ஆ. பால் பி.ஏ., எல் டி. எல்லோரையும் வரவேற்று ஆண்டு அறிக்கை வாசித்தார். திருமதி ஜோஷுவா அம்மையார் விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கினர். நன்றி கூறியதோடு விழா முடிந்தது.

ந. கி.

கோவை புதுமார்கெட் சில்லரை வியாபாரிகள் சங்கம்

கோவை, டிச. 25—

இச்சங்கத்தின் வருடாந்தர மகாசபைக் கூட்டம் நவ. 30-ந் தேதி நடைபெற்றது. புத்தாண்டுக்கு ஏ. மருதாசலம் தலைவராயும், என். முகமது உசேன் செயலாளராயும் டி. வேடஞ் செட்டியார் பொ. பொருளாளராயும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விவசாய சங்க அமைப்பு

கல்லமநாய்க்கன்பட்டி, டிச. 5—

சாத்தூர் தாலுக்கா கல்லமநாய்க்கன்பட்டியில் சென்றமாதத்தில் விவசாயிகள் கூடி விவசாய சங்கம் அமைத்தார்கள். திருவேங்கடம் தலைமை வகித்தார். ரா. சங்கரப்பனைத் தலைவராயும், ரா. அழகர்சாமியைக் காரியதரிசியாகவும் கொண்ட நிர்வாகக்குழு அமைக்கப்பட்டது.

ராமநாதபுரம் ஜில்லாவுக்கு கேரள ஆற்று நீர்

நீர் விசைக் கமிஷன் யோசனை

மதுரை, டிச. 4—

கேரளத்திலுள்ள பம்பையாற்றிலிருந்தும் இதர நான்கு நதிகளிலிருந்தும் நீரைத் திருப்பி ராமநாதபுரம் ஜில்லாவில் பாசனத்துக்குப் பயன்படுத்துவதைப் பற்றி மத்திய நீர்விசைக் கமிஷன் யோசித்து வருவதாக சென்னையின் முன்னாள் பிரதம எஞ்சினியரும்விவசாய உற்பத்திப்பொருக்குக் கமிட்டியின் தலைவருமான திரு. ஏ ஆர். வேங்கடாச்சாரி நேற்று தம்மைச் சந்தித்த ராமநாதபுரம் ஜில்லா அதிகாரிகளிடமும் இதர பிரமுகர்களிடமும் தெரிவித்தார்.

இது குறித்து ஐந்தாண்டுகளுக்கு முன் தான் ஒரு திட்டம் சமர்ப்பித்ததாயும் சென்னை கேரள அரசாங்கங்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றக் கூடிய நீண்ட காலத் திட்டத்தில் இது ஒரு பகுதியாகுமென்றும் அவர் கூறினர்.

இந்த ராஜ்யத்தின் சில பகுதிகளில் பயிர் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தைப் பரீட்சார்த்தமாகக் கொண்டுவரலாம் என்று கமிட்டி சிபாரிசு செய்யக் கூடும் என்று கமிட்டியின் உறுப்பினர் திரு. பழனிச்சாமிக்கவுண்டர் கூறினர்.

இதுவரை இக்கமிட்டி ஐந்து ஜில்லாக்களுக்கு விஜயம் செய்திருக்கிறது. 1959-ம் ஆண்டு பிப்ரவரி இறுதியில் அறிக்கை சமர்ப்பிக்கப்படலாம் என்று தெரிகிறது.

சிறப்புக் கூட்டம்

அண்ணாமலைநகர், டிச. 1—

28-11-58 வெள்ளை மாலை அண்ணாமலை தொழிற் கல்லூரி மாணவர் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில், காரைக்குடி மத்திய மின் இரசாயன ஆராய்ச்சி நிலய சீனியர் விஞ்ஞான அதிகாரி திரு. டாக்டர் ஏ. கே. என். ரெட்டி எம். எஸ், சி. பி. எச். டி; அவர்கள் 'சமூகமும் விஞ்ஞானமும்' என்ற தலைப்பில் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

கூட்டத்திற்கு கல்லூரி முதல்வர் திரு எம். எஸ், கோபால கிருஷ்ணன் பி, எஸ், சி. எ. எம். ஐ இ தலைமை வகித்தார். மாணவர் தலைவர் சி. முத்துராமன் அனைவரையும் வரவேற்றார். செயலாளர் கே. என். ரங்கராஜன் நன்றி கூறினர்.

தஞ்சை வர்த்தகர்கள் சங்கம்

தஞ்சை, டிச. 2

தஞ்சை வர்த்தகர்கள் சங்க செயற்குழுக் கூட்டம் ஞாயிறு கிழமை சங்கக் கட்டிடத்தில் நடந்தது. அதுபோது தஞ்சை ராஸா மிராசுதார் ஆஸ்பத்திரி வேறிடம் மாற்றப் போவதாக கேள்விப்படுவதால், மாற்றுதலானது நகரின்கண்ணுள்ள பொது மக்களுக்கு மிகுந்த அசௌகர்யத்தை விளைவிக்குமாதலாலும், அதை அவ்விடத்திலேயே விஸ்தரிக்கவும், வைத்தியக் கல்லூரி கட்டுவதற்கும் தேவையானவசதி சுற்றுப்புறங்களில் இருப்பதாலும் இந்திய யூனியன் தலைவர் ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் கல்லூரிக்கு கால்கோள் விழா நடத்தியிருப்பதாலும் ஆஸ்பத்திரியை மாற்றுகிருக்கும்படியும் மெடிகல்கல்லூரியையும்ஆஸ்பத்திரிக்குள்ளேயே அமைக்குமாறும் அரசாங்கத்தை வேண்டி ஒரு தீர்மானமும் நிறைவேறியது.

தேவர் பிறந்த நாள்

தூத்துக்குடி, டிச. 3—

திரு. முத்துராமலிங்க தேவர் எம். பி.யின் பிறந்த நாள் விழா 30-11-58ல் கொண்டாடப்பட்டது. ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடந்தன. டி. எஸ். ஆதிமூலம், மூக்கையாத் தேவர் எம். எல். ஏ., டி. ஜி. கிருஷ்ணமூர்த்தி முதலியவர்கள் தேவரின் தியாகத்தைப் பற்றி பாராட்டி பேசினர்.

டாக்டர் சேதுப் பிள்ளைக்குப் பொன்னுடை போர்த்தும் விழா

அண்ணாமலை நகரில் நடைபெறும்

அண்ணாமலைநகர், டிச. 7—

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை டிச. 12ம் தேதி இங்கு ஏற்பாடாகியிருக்கும் விழாவொன்றில் பொன்னுடை போர்த்துப் பாராட்டப்படுவார். டாக்டர் பிள்ளை நாட்டுக்குச் செய்துள்ள சிறந்த சேவைகளைப் பாராட்டும் முறையில் அண்ணாமலைப் பல்கலைக் கழக துணைவேந்தர் திரு. எம். ஏ. முத்தையா செட்டியார் அவருக்குப் பொன்னுடை போர்த்துவார்.

Regd. M. No. 5954 Phone: 2341

ஜனசக்தி

JANASAKTHI

ஆசிரியர்: ப. ஜீவானந்தம்

(வெளியூர்ப் பதிப்பு)

மலர் 15 இதழ் 114] சென்னை 10-12-58 விளம்பி வருஷம் கார்த்திகைமீ 25உ புதன்கிழமை [4 பக்கங்கள் 7 காசுகள்

காவாய்த் தண்ணீர் இந்தியா - பாக். பேச்சுகள்

வாஷிங்டன், டிச. 8—

சிந்து நதித் தண்ணீர் சம்பந்தமாக இந்தியா-பாகிஸ்தான் நாடுகளின் பிரதிநிதிகள் உலக பாங்கு அதிகாரிகளுடன் நாளை விவாதிப்பார்கள் என்று தெரிகிறது. இந்தப் பேச்சுவார்த்தைகள் மூன்று வாரங்கள் தொடர்ந்து நடக்கும்.

இந்தோனேஷியாவில் இந்திய ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு

அண்ணன் வந்திருப்பதாக ஜனாதிபதி சுகர்னோ அன்புமொழி





ஜகர்த்தா, டிச. 8—

இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத் இன்று இந்தோனேஷியாவுக்கு வந்துசேர்ந்தார். பத்து லட்சத்துக்கு அதிகமான மக்கள் விமான நிலையத்திலும், தெருக்களிலும் திரண்டு நின்று ஜனாதிபதியை வரவேற்றனர். இந்தோனேஷியாவின் தலைநகரில் இவ்வித கோலாகலமான வரவேற்பு முன்பு என்றுமே நடந்ததில்லை.

இந்தோனேஷியாவின் ஜனாதிபதி சுகர்னோ விமான நிலையத்தில் இந்திய ஜனாதிபதியை வரவேற்றார். டாக்டர் ராஜேந்திர பிரசாத் விமானத்திலிருந்து இறங்கும்போது 21 குண்டுகள் வெடித்தன. இந்நாட்டின் சம்பிரதாயப்படி, வாளேந்திய யுவதிகளும், வாலிபர்களும் இந்திய ஜனாதிபதிக்கு மாலைகள் சூட்டி வரவேற்றனர். ஜாவா இன்னிசை முழங்கியது.

இத் தலைநகரில் ஒவ்வொரு வீட்டிலும் இந்திய தேசியகொடிகளும் இந்தோனேஷிய தேசிய கொடிகளும் பறந்து கொண்டிருந்தன.

விமான நிலையத்திலிருந்து சுதந்திர அரண்மனை வரையில் வழி நெடுக ஆடவரும் மாதரும் குழந்தைகளும் கூடியிருந்து ஜனாதிபதியை வரவேற்றனர். சுதந்திர அரண்மனையில்தான் ஜனாதிபதி தங்கியிருப்பார். 12 நாட்கள் டாக்டர் பிரசாத் இந்நாட்டில் தங்குவார். மூன்று நாட்கள் இத் தலைநகரில் தங்கியிருப்பார். இந்தோனேஷியாவின் இதர பாகங்களில் ஆறு நாள் சுற்றுப்பிரயாணம் செய்வார். பாண்டுங், பாலி, போகர் முதலிய நகரங்களுக்கும் விஜயஞ் செய்வார்.

ஜனாதிபதி பேச்சு

டாக்டர் பிரசாத் ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் பேசினார். அவர் தமது பிரசங்கத்தில் பல நூற்றாண்டுகளாக இந்தோனேஷியாவுக்கும் இந்தியாவுக்குமிடையில் இருந்த பண்டைத் தொடர்புகளைக் குறிப்பிட்டார். "உங்கள் முன்னோர்கள் எமது முன்னோர்களை நன்கு அறிவர்" என்றார்.

இந்திய ஜனாதிபதி மேலும் பேசுகையில், "இடையில், இந்த தொடர்புகள் துரதிஷ்டவசமாக துண்டிக்கப்பட்டன. அன்னிய ஆதிக்கத்திற்கு நமது இரு நாடுகளும் பலியாயின. இன்று நமது நாடுகள் இரண்டும் விடுதலை பெற்றுவிட்டன, மீண்டும் நமது பண்டைத் தொடர்பு புதுப்பிக்கப்பட்டுவிட்டது. உங்கள் நாட்டைப் பார்க்கவும் அறிந்துகொள்ளவும் நான் ஒரு யாத்ரீகனாக இங்கு வந்திருக்கிறேன் என்றார்.

இந்தோனேஷிய ஜனாதிபதி தமது வரவேற்புரையில், 'இந்திய ஜனாதிபதி நமக்கு மிகப் பெருமை வாய்ந்த விருந்தாளிமட்டுமல்ல, ஒரு சகோதரருமாவார். தம்பியைப்பார்க்கவந்த அண்ணன் போல வந்திருக்கிறார்' என்றார்.

நூற்றுக்கணக்கான இந்தியரும் வரவேற்பில் கலந்துகொண்டனர். இந்தோனேஷியாவில் 20,000 இந்தியர் வாழ்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

உலகஜனநாயகவாலிபர்சம்மேளன நிர்வாகக் கமிட்டிக் கூட்டம்

இலங்கையில் நடைபெறுகிறது

சமாதானத்தை ஏற்படுத்துவதில் வாலிபரின் பங்கு பற்றி பண்டாரநாயகா

கொழும்பு, டிச. 8—

இங்கு துவங்கியுள்ள உலக ஜனநாயக வாலிபர் சம்மேளனத்தின் நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தின் 2 நாள் கூட்டத்தை ஆரம்பித்து வைக்கையில் இலங்கைப் பிரதமர் திரு. பண்டாரநாயகா, சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான உறுதியை உண்டாக்குவதற்கு உதவும்படி உலக வாலிபர்களுக்கு அறைகூவல் விடுத்தார்.

அவர் மேலும் பேசுகையில், "இன்று சமாதானம் ஸ்திரமாக இருப்பதாகத் தோன்றினாலும், பயங்கரமான ஆயுதங்களைக் கொண்டுள்ள நாடுகள் பரஸ்பரம் ஒருவரையொருவர் கண்டு பயப்படுவதினால்தான் சமாதானம் நிலவுகிறது என்று கூறப்படுகிறது.

"ஆகவே சமாதானத்திற்கான ஆக்கபூர்வமான அடிப்படையை ஏற்படுத்தும் ஒருமுறை ஆயுதப் பரிஹாரணம் கொண்டு வருவதாகும். அத்திசையை நோக்கி உலக அபிப்பிராயம் வளர்ந்து வருவது கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்", என்றும் பண்டாரநாயகா கூறினார்.

மனித சமூதாயம் எதிர்ப்பட்டு வரும் பல்வேறான வேறுபாடுகளையும் இணைந்து போகும்படி செய்ய வேண்டும். அதுதான் அணுசக்தி சகாப்தத்தின் மிகப் பெரிய பிரச்சினையாகும். இந்த வித்தியாசங்களுக்குத் தீர்வு காண்பதற்கு, இந்தியப் பிரதமர் நேருவும், சீனப் பிரதமர் சூ யென்-லாயும் உருவாக்கியதும் பின்னர் ஆசிய ஆப்ரிக்கா நாடுகளின் பாந்துங் மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமான பஞ்சசீலக்கொள்கைகளே நடைமுறையானதாகும்.

சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பொதுவான பணியில் உலக வாலிபர்கள் ஒரு பிரதானமான பங்கை ஆற்றவேண்டும் என்றும் பண்டாரநாயகா குறிப்பிட்டார்.

சீனா, ஜப்பான், ருமேனியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, போலந்து, மேற்கு ஜெர்மனி, ஹங்கேரி, ஐக்ய அரபுக்குடியரசு, லெபனான், இராக், சோவியத் யூனியன், பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகள் உட்பட 41 நாடுகளிலிருந்து வந்த பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்திய எல்லைவரை சீன ரயில்வே

ஹாங்காங், டிச. 7—

சிங்கையிலிருந்து திபேத்தின் தலைநகரான லாசாவுக்கு 500 மைல் நீள ரயில்வே இணைப்பு ஏற்படுத்த திட்டம் பூர்த்தியாகி விட்டதாக நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவிக்கிறது.

இந்த புதிய ரயில்வே திட்ட மூலம் சீனாவின் ரயில்வே இந்தியாவின் வட எல்லைக்கு 200 மைல் தூரம்வரை பரவுகிறது.

13,000 முதல் 16,000 அடி உயரத்தில் மலைகளில் இந்த ரயில்வே அமைக்கப்படுகிறது. உலகிலே இவ்வளவு உயரத்தில் ரயில்வே வேறெங்குமில்லை இந்த புதிய ரயில்வே தண்டவாளம் 300 மைல் பனிமூடிக்கொள்ளும் பிரதேசம் வழியாகவும் 20 மைல் தூரம் உப்பு உரி வழியாகவும் அமைக்கப்படும்.

மே தினம் கட்டாய விடுமுறை

கேரளத்தில் மசோதா நிறைவேறியது

திருவனந்தபுரம், டிச. 8—

கேரள தொழில் ஸ்தாபன (தேசீய, மற்றும் திருவிழா விடுமுறை) மசோதா இன்று கேரள சட்டசபையில் நிறைவேறியது. அதன்படி தொழில் ஸ்தாபனங்களில் வேலைசெய்வோர் ஒரு வருஷத்தில் சம்பளத்துடன் ஏழு தேசிய திருவிழா விடுமுறை நாட்களுக்குத் தகுதியுள்ளவர்கள்.

மே தினம், குடியரசு தினம், சுதந்திரதினம் ஆக மூன்று தினங்கள்போக மீதம் நான்கு நாட்களை நிர்வாகத்தினரும், தொழிலாளரும் கலந்து முடிவுசெய்ய வேண்டும். பொதுவாக எல்லா அங்கத்தினர்களும் இதை வரவேற்றனர். ஆனால் காங்கிரஸ் அங்கத்தினர்கள்மட்டும் இம் மசோதாவை செலக்ட் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று கோரினர். சில அங்கத்தினர் காந்தி பிறந்த தினத்தையும் கட்டாய விடுமுறையாகக் கொண்டுவரவேண்டுமென்று குறிப்பிட்டனர்.

விவாதத்திற்கு பதிலளித்த மந்திரி டி. வி. தாமஸ், காந்தி பிறந்த தினத்தை விடுமுறை நாளாக்க மத்திய சர்க்காரே விரும்பவில்லையென்றும், இதேபோன்ற மசோதா ஒன்று சென்னை சட்டசபையிலும் நிறைவேறியிருப்பதை சுட்டிக்காட்டியும், காந்தி நாட்டின் அதிக பொருள் உற்பத்திக்கே பாடுபட்டார் என்றும் ஆகவே அவர் பிறந்த தினத்தன்று விடுமுறை இருக்கலாகாதென்றும் கூறினார். அவர் மேலும் கூறுமிடத்து, "குறிப்பிட்ட விடுமுறை நாட்களில் வேலை செய்ய தொழிலாளி கேட்கப்பட்டால் ரெவினியு சட்டப்படி அவன் தன் சம்பளத்தை அந்த நாளைக்குப் பெற வசதியளிப்பதே" இம் மசோதாவின் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

காணவில்லை

என் மகன் V. சதானந்தன் 29—10—58லிருந்து காணவில்லை. வயது 13, ஏழாவது வகுப்பு படித்தவன், உயரம் 3½ அடி, கிராப்புத்தலை, சிகப்பு நிறம், நெற்றியில் முன் சுழி, மெல்லிய தேகம், காக்கி டிராயரும் ஊதா சட்டையும் அணிந்திருந்தான் கழுத்துக்குக் கீழ் மார்பின் மேல் கட்டி வந்த வடு ஒன்று இருக்கும். மேற்படி அடையாளமுள்ள பையனைக் கண்டுபிடித்துக் கொடுப்பவர்களுக்கு நன்றி செலுத்துவதோடு தக்க சன்மானமும் தரப்படும். தகப்பனார் வீராசாமி கிராமணி, 100, அபிபுல்லா ரோடு, தி. நகர், சென்னை-17.

பாகிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ உதவி

லோக சபையில் மெம்பர்கள் கண்டனம்

புதுடில்லி, டிச. 8—

இன்று மக்கள் சபையில் வெளிநாட்டுக் கொள்கை சம்பந்தமான விவாதத்தில், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தொடர்ந்து ராணுவ உதவி அளித்து வருவதைப் பல அங்கத்தினர்கள் பலமாகக் கண்டித்துப் பேசினர்.

திரு. என். ஜி. ரங்கா (காங்) பேசுகையில், இந்தியா ரஷ்யாவிடமிருந்து ராணுவ சாதனங்களை வாங்குவதைப்பற்றி யோசிக்க வேண்டுமென்றார். ஜோகிம் ஆல்வாவும் அமெரிக்காவின் போக்கைக் கண்டித்தார்.

டாங்கே

கம்யூனிஸ்ட் தலைவர் எஸ். ஏ. டாங்கே பேசுகையில், பாகிஸ்தானுக்கு அமெரிக்கா தொடர்ந்து ராணுவ உதவி அளித்து வருவதைக் கண்டித்தார்.

சர்வதேசப் பிரச்சினைகள் சம்பந்தமாக பிரிட்டன், அமெரிக்கா விஷயமாக இந்தியா தன் கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் டாங்கே வற்புறுத்தினார்.

இந்த நாடுகளுடன் இந்தியா நட்புறவுடனும், நல்லெண்ணத்துடனும் இருக்க வேண்டுமென்பதைத் தான் ஆட்சேபிக்கவில்லையெனினும், இன்றுள்ள நிலைமை அந்நாடுகளின் பால் நம் கொள்கையைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது, என்று டாங்கே கூறினார்.

கிருபளானி

பி. சோ. தலைவர் ஆசார்ய கிருபளானி பேசுகையில், நம் எல்லையை மீறும் பாகிஸ்தான் திருப்புகள் விஷயத்தில் இந்தியா வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றார்.

டாக்டர் பி. சுப்பராயன்

இலங்கையிலும், தெ. ஆப்ரிக்காவிலும் உள்ள இந்தியர்களின் உரிமைகளைப் பாதுகாக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றார்.

ஜோகிம் ஆல்வா

வெளிநாடுகளில் அமெரிக்கா ராணுவ தளங்களை ஏற்படுத்து[illegible] வதைக் கண்டித்தார். [illegible] பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமைக்கு அதுதான் மூலகாரணமென்றார். அமெரிக்கத் தலையீடும், ஊக்கமும் இல்லாமலிருந்திருந்தால், பாகிஸ்தானில் ராணுவ ஆட்சியே ஏற்பட்டிருக்காது என்றார். ரஷ்யாவுடனும், சீனாவுடனும் இந்தியா நெருங்கிய நட்புறவுகள் கொள்ளவேண்டுமென்றார்.

அண்மையில் சோவியத் யூனியனில் 5 வாரம் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டுத் திரும்பியுள்ள ஆல்வா, சோவியத் மக்கள் இந்தியாவையும், இந்திய மக்களையும் பெரிதும் உள்ளன்புடன் நேசிப்பதாகக் கூறினார்.

அதல் பீஹாரி வாஜ்பாயி, (ஜனசங்), பிரதாப் கேசரிதேவ் (கணதந்திரபரீஷத்) ஆகியோரும் பாகிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ உதவியைக் கண்டித்துப் பேசினர்.

காரைக்குடி இந்தியன் பாங்கில் வேலை நிறுத்தம்

காரைக்குடி, டிச. 8—

இங்குள்ள இந்தியன் பாங்கில் வேலை பார்க்கும் எம். தெய்வநாதன் என்பவருக்கு இரண்டு வருஷம் வரை சம்பள உயர்வை நிறுத்தி வைக்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது தெரிந்ததே. இந்த உத்தரவை ஆட்சேபித்து இன்று இந்தியன் பாங்கி ஊழியர்கள் ஒரு மணி நேரம் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்.

பாங்கி ஊழியர்கள் அனைவரும் கையொப்பமிட்டு பாங்கி நிர்வாகத்திற்கு ஒரு விண்ணப்பம் கொடுத்தனர். தெய்வநாதன் தவறு செய்யாதவர் என்றும் அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனை வாபஸ் பெறப்பட வேண்டுமென்றும் அந்த விண்ணப்பத்தில் வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

எஸ். எம். டி. பஸ் அறப்போர்

சத்தியாக்கிரஹிகளுக்கு 3 வார சிறைத் தண்டனை!

பட்டுக்கோட்டை, டிச. 7—

எஸ். எம். டி பஸ் தொழிலாளர் அறப்போரில் கைது செய்யப்பட்ட ஜில்லா பஸ் தொழிலாளர்கள் சங்கச் செயலாளர் தோழர்கள் ஏ. டி. மாரியப்பன், ஆறுமுகம், ரங்கராஜலு, அமிருதலிங்கம் ஆகியோருக்கு இவ்வூர் சப் மாஜிஸ்டிரேட் மூன்று வாரம் சிறைத் தண்டனை விதித்தார். (ந. நி.)

நிலச்சீர்திருத்தப் பிரச்சினை மேலோங்கி நிற்கும்

காங்கிரஸ் காரியக்கமிட்டி கூட்டம்

புதுடில்லி, டிச. 8—

நாகபுரியில் நடைபெறவிருக்கும் அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டுக்குக் கொண்டுவரவிருக்கும் தீர்மானங்கள் சம்பந்தமாக இங்கு நடைபெறப்போகும் காங்கிரஸ் காரியக்கமிட்டி விவாதம் செய்யும் என்று தெரிகிறது.

காரியக் கமிட்டிக் கூட்டம் டிசம்பர் 13, 14-ந் தேதிகளில் நடைபெறப் போகிறது.

நிலச்சீர்திருத்தம் பற்றி அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் விவசாயத்துறை உப கமிட்டியின் சிபார்சுகள் முக்கியமாக விவாதிக்கப்படும். மூன்றும் திட்டத்தின் காலத்தில் உற்பத்தியை இருமடங்காக்க 1959 மார்ச் மாதத்திற்குள் நிலச் சட்டங்கள் வரவேண்டும் என்று ராஜ்ய சர்க்கார்களுக்கு விடுத்துள்ள சுற்றறிக்கை பற்றியும் விவாதிக்கப்படும்.


மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றியும் சர்வதேச நிலை பற்றியும் நாகபுரி மாநாட்டில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள் பற்றியும் காரியக் கமிட்டி விவாதிக்கும்.

ஆந்திரத்தில் காங்கிரஸிற்குள் ஏற்பட்டுள்ள கோஷ்டிச் சண்டை பற்றியும் விவாதம் நடக்கும் என்றும் காங்கிரஸ் தலைமை ராஜ்ய காங்கிரஸ் வாதிகளுக்கு உபதேசம் அளிக்கும் என்றும் கூறப்படுகிறது.

தஞ்சை ஜில்லா கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு

தஞ்சை, டிச. 6—

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தஞ்சை ஜில்லா 5-வது மகாநாடு இம்மாதம் 12, 13 14 தேதிகளில் தஞ்சையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ந-நி



புதுடெல்லியில் இப்பொழுது நடைபெற்றுவரும் "இந்தியா 1958" கண்காட்சியின் ஒரு ரமயமான தோற்றம். 123 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இக்கண்காட்சி, பல்வேறு துறைகளிலும் இந்தியா அடைந்துள்ள முன்னேற்றத்தைச் சித்தரிக்கும் முதல் தேசீயக் கண்காட்சியாகும்.

அமெரிக்கா பிரிட்டன் பற்றிய இந்தியாவின் போக்கு

மாறுதல் வேண்டும் என்று டாங்கே வலியுறுத்தல்

புதுடில்லி, டிச. 8—

சர்வதேசப் பிரச்சினைகளில் அமெரிக்கா-பிரிட்டன் இவற்றுடன் இந்தியா அனுசரிக்கும் போக்கில் மாறுதல் ஏற்படவேண்டும் என்று இன்று மக்கள் சபையில் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் எஸ்.ஏ. டாங்கே வலியுறுத்தினார்.

சர்வதேச உறவுகளில் எல்லா நாடுகளுடனும் நேசமாக இருத்தல் என்ற பொதுக் கோட்பாட்டைத் தாம் எதிர்க்கவில்லை எனவும் இன்றுள்ள நிலையில் மேலே குறிப்பிட்ட நாடுகள் விஷயத்தில் மாறுபட்ட போக்கை அனுஷ்டிக்க வேண்டும் என்றும் டாங்கே வலியுறுத்தினார்.

பாகிஸ்தானில் ராணுவ அரசாங்கம் கள்ள மார்க்கெட்டை ஒழிப்பதில் தீவிரம் காட்டுவதாக இந்தியாவில் சில பத்திரிகைகள் புகழ்கின்றன. ஆனால் அங்கு கள்ள மார்க்கெட் ஒழிக்கப்படவில்லை அரசியல் அடிப்படையில் போட்டியின் காரணமாகப் பலர் கைது செய்யப் படுகின்றனர். ராணுவ ஆட்சியின் யதார்த்த நிலையை, அதனால் ஜனநாயக நடைமுறைக்கு ஏற்பட்டுள்ள பாதகத்தை இந்திய மக்களுக்கு எடுத்து விளக்கவேண்டும் என்று டாங்கே கூறினார்.

நடுநிலை கொள்கைக்கு பொருந்தாது

காமன்வெல்த் ராணுவத் தலைவர்கள் மாநாட்டில் இந்தியா கலந்துகொண்டதையும், பிரிட்டிஷ் கடற்படையுடன் சேர்ந்து இந்திய கடற்படை ஒத்திகைகள் நடத்தியதையும் டாங்கே கண்டித்தார். இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கைக்கு இது பொருந்தாது என்றார்.

ஆயுதங்கள் விஷயத்தில் பிரிட்டனையே சார்ந்திருப்பது கூடாது. அதிலும் நமது சுதந்திரத்தை விரும்பாத ஒரு வல்லரசைச் சார்ந்து நிற்பது கூடாது என்று டாங்கே சுட்டிக் காட்டினார்.

இந்துமகா சமுத்திரத்தில் அமெரிக்கக் கடற்படை நடவடிக்கைகள் பற்றி இந்தியா உஷாராக இருக்க வேண்டும் என்றார்.

அமெரிக்க உதவி பெற்ற காரணத்தால் இந்தியா தனது கொள்கைகளை மாற்றிக் கொண்டது என்று தாம் கூறவில்லை என்றும் டாலர் டாலர்தான் அமெரிக்கா தனது பழைய வழக்கத்துடன்தான் உதவ முன் வருகிறது. எனவே எச்சரிக்கை தேவை என்றார் டாங்கே.

ஒரிஸ்ஸா காங்கிரஸ் மந்திரிசபை தப்பியது

புவனேஸ்வர், டிச. 8—

இன்று ஒரிஸ்ஸா சட்டசபையில் காங்கிரஸ்மந்திரிசபை இருமுறை கண்டம் தப்பியது. உபமான்யங்கள் விவாதிக்கப் படுகையில் பிரஜா சோஷலிஸ்ட் உறுப்பினர் ஒரு வெட்டுப் பிரேரணைகொண்டு வந்தார். அதை ஓட்டுக்கு விட்டபோது 7 வாக்குகளால் மந்திரிசபை பிழைத்தது. சோஷலிஸ்ட் கட்சியின் வெட்டுப் பிரேரணை ஓட்டுக்கு விடப்பட்டபோது மந்திரிசபை இரண்டாம் முறை ஐந்து வாக்குகளால் தப்பியது.

எல்லைச் சம்பவங்கள்

மக்கள் சபையில் நேரு தகவல்

புதுடில்லி, டிச. 8—

இன்று மக்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் பாகிஸ்தான் பலாத்காரமாக எல்லையை மீறுவது இப்பொழுது அதிகரித்துவிட்டது என்றுபிரதம மந்திரி நேரு கூறினார். இவ்விதச் சம்பவங்களுக்கு ஒரு பட்டியல் தயாரித்து சபையில் அறிக்கை ஒன்று அளித்திருப்பதாகவும் அவர் கூறினார், எல்லையை மீறும் செயல் அதிகரித்திருப்பதாக பட்டியலிலிருந்து தெரிகிறது.

நவம்பர் 19-ல் சபையில் அறிக்கை வெளியிட்ட பின்னரும் அதிகப்படியான சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. டிசம்பர் 6-ம் தேதி வரையில்நடைபெற்றுள்ள சம்பவங்களின் வுவரத்தை விரைவில் சபைக்குக் கொண்டுவருவதாகவும் நேரு கூறினார்,

பாகிஸ்தான் பக்கத்தைவிட நம்முடைய பகுதியில் போலீசாரும் ராணுவப் படைகளும் எண்ணிக்கையில் குறைவா என்று பரூச்சா கேட்டார்;

நான் அதை ஒப்பிட்டுச் சொல்வதற்கில்லை யென்றும், முக்கியமான கட்டங்களில் போதுமான அளவு இருக்கின்றனர் என்று தாம் எண்ணுவதாக நேரு கூறினார்.

பாகிஸ்தான் இராணுவம் சுட்டாலும் நம்முடைய ராணுவம் சுடக்கூடாது என்று இந்திய அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளதா என்று கேட்டதற்கு இல்லை என்று நேரு வற்புறுத்திக் கூறினார்.

1958 ஆகஸ்டு மாதம் எல்லைத் தகராறு நிகழ்ந்தபோது 5 இந்தியர்கள் கைது செய்யப்பட்டு எல்லோரும் விடுவிக்கப் பட்டனர் என்று வெளிநாட்டமைச்சர் ஜே. என். ஹசாரிக்கா கூறினார்.

ரயில் சங்கிலியை இழுந்தால் சிறை

மக்கள் சபையில் புது மசோதா

புதுடில்லி, டிச. 8—

ரயில் சங்கிலியை அனாவசியமாக இழுப்பவருக்கு 3 மாதம் வரையில் சிறையோ அல்லது 250 ரூபாய்வரை அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கலாமென்று ஒரு மசோதாவை இன்று மக்கள்சபையில் ஜகஜீவன் ராம் சமர்ப்பித்தார்.

கள்ளச் சேமிப்பாளருக்கு கடுங்காவல் சிறைதண்டனை

லாகூர், டிச. 8—

கோதுமை சிமெண்ட், இதர பண்டங்களைக் கள்ளத்தனமாகச் சேமித்து வைத்திருந்த குற்றத்திற்காக முன்னாள் பாகிஸ்தான் உதவி மந்திரி யூசப் முகமதுக்கும் அவரது இரு சகோதரர்களுக்கும் தலா மூன்று வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இது மட்டுமன்றி யூசப் முகமதுக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் மற்ற இருவருக்கும் தலா இருபதாயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

இந்தத் தீர்ப்பு ராணுவ நீதிமன்றத்தால் அளிக்கப்பட்டது.

முந்திரா விவகாரம் பற்றிய சாட்சியம்

பார்லிமெண்ட் நூல் நிலையத்திற்கு கொடுக்கப்படும்

புதுடில்லி, டிச. 8—

முந்திரா விவகாரத்தில் விவியன்போஸ் கமிட்டி முன் கூறப்பட்ட சாட்சிகளைப் பார்லிமெண்டின் நூல் நிலயத்தில் வைப்பது பற்றி ஆலோசனை செய்ய உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் இன்று ராஜ்ய சபையில் சம்மதம் தெரிவித்தார்.

முந்திராவுடன் ஆயுள் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் நடத்திய பேரத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கைபற்றி சர்க்கார் முடிவுசெய்யும் முன்பு விவியன்போஸ் கமிட்டியின் அறிக்கையைச் சபையினருக்கு வழங்கமுடியாதென்று உள்நாட்டு மந்திரி அறிவித்தார்.

காணவில்லை

எனது மகன் ராஜா, சுமார் 4½ வயது, தடித்த சரீரம், மாநிறம், கிராப்புத் தலை, கருங்கல்பாளையம் மாரியம்மன் பண்டிகை (3-12-58) தின முதல் காணவில்லை. பார்த்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தகவல் கொடுத்தால் பேருதவியாக இருக்கும்.

கருப்பான், நகரசுத்தித் தொழிலாளி முனிசிபல் சத்திரத்துச் சேரி, பழைய ரயில்வே ஸ்டேஷன் சமீபம் நேத்தாஜி ரோடு, ஈரோடு.

அறத்திற்கே அன்பு சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை —குறள் 76

அறியாதவர்கள் அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவார்கள்; ஆராய்ந்து பார்த்தால், வீரத்திற்கும் அதுவே துணை என்பதைக் காணலாம்.

ஜனசக்தி

சென்னை 10-12-1958

காங்கிரஸிற்குள்ளே குத்து வெட்டு

"உத்தரப் பிரதேச முதலமைச்சர் சம்பூரணாநந்தர் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்போகிறோம். இதற்கு அனுமதி வேண்டும்" என்று உ. பி. காங்கிரஸ் தலைவருள் ஒருவரான ஆசார்ய ஜுகல் கிஷோர் காங்கிரஸ் அக்ராசனர் தேபரிடம் கோரியுள்ளார்.

"உ. பி. சட்ட சபை உறுப்பினர்களின் ஆதரவு எனக்கு இருக்கிறது. நம்பிக்கை ஓட்டு எடுக்கத் தயார்" என்று சம்பூரணானந்தர் சவால் விடுகிறார்.

இரு சாரினரும் காங்கிரஸ்காரர்கள். கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் நிற்பதாக இரு சாரினரும் ஆணை வைத்துச் சொல்கிறார்கள். பட்டம் பதவி யாசை மருந்துக்கும் கிடையாது என்று சத்தியம் செய்கிறார்கள்.

ஆனால் ஒருவரை எதிர்த்து மற்றவர் கடுமையாகத் தாக்குகிறார்கள். விரோதக் குரோதப் பிரசாரம் நடந்த வண்ண மிருக்கிறது. உத்தரப் பிரதேசத்தில் எதிர்க் கட்சிகள் ஓரணியில் நின்று நடத்திய உணவுப் போராட்டம் காங்கிரசைக் கலகலக்கச் செய்து விட்டது. பிடிவாத [illegible] அமர்ந்திருந்த முதலமைச்சர் [illegible] பணிந்து வர நேரிட்டது. இதே பொழுதில் காங்கிரஸுக்குள் பிளவுகள் வெடிக்கின்றன.

ஏற்கெனவே கட்சிக் கட்டி நிற்கும் குப்தா கோஷ்டி [illegible] ராஜினமா, கோஷ்டிப் பூசல்கள் இவற்றின் பலனாக காங்கிரஸில் பெரிய விரிசல் ஏற்பட்டுள்ளது. இதன் விளைவு போகப் போகத் தெரியும்.

பஞ்சாப் காங்கிரஸிலோ பெருஞ் சண்டை. முதலமைச்சர் கைரோன் மீது நம்பிக்கையில்லை; அவர் ராஜினமாச் செய்தல் வேண்டும் என்று காங்கிரஸ் பிரமுகர் சுதபோத் சந்திர குப்தா கோருகிறார். மந்திரியையே [illegible] ஆள் விட்டு அடிக்கும் காட்சியை டாக்டர் பார்க்கவே சம்பவத்தில் பார்க்க முடிந்தது.

அகாலியருள் ஒரு பகுதியை காங்கிரஸ் ஆதரித்ததும், குருத்வாரா தேர்தலில் தாரா சிங் தோல்வியும் புதிய தலைவலிகளைக் கொண்டு வந்திருக்கின்றன. ஹிந்து [illegible] சீக்கிய வகுப்பு வாதிகள் கையில் காங்கிரஸ் சிக்கிக் கொண்டு திக்கு முக்காடுகிறது.

ஆந்திரத்தில் நான்கு முன் மந்திரிகள் உட்பட காங்கிரஸ் [illegible] முதலமைச்சர் [illegible] ரெட்டிக்கு எதிராகப் [illegible] கோலம் கொண்டு [illegible] டனர். அதிருப்தியாளர் [illegible] மக்கள் பிரச்சினைகளுக்காக சட்ட சபைக்குள்ளும் வெளியிலும் போ[illegible] முடிவு செய்துள்ளனர். [illegible] நாட்டிலுள்ள ஜனநாயகக் காங்கிரஸ் போல ஒரு போட்டிக் காங்கிரஸ் உருவாகுமா? அதிசயக்க வேண்டுவதில்லை.

பம்பாயில் பம்பாய், மகாராஷ்டிரம், குஜராத், நாகபுரி, [illegible] முத[illegible] பல பகுதிகளும் [illegible] காங்கிரஸ் பகிரதப் பிரயத்னம் செய்கிறது. இதற்குக் [illegible] பம்பாய் விஷயத்தில் [illegible] பல காங்கிரஸ் [illegible] உப தேர்தல் [illegible] எல்லாம் காங்கிரஸ் [illegible] யடைகிறது.

வங்காளத்தில் முன் மந்திரி சித்தார்த்த ரே ராஜினமாச் செய்த உபதேர்தலில் மீண்டும் தேர்ந்தெடுக்கப் பட்டது, உணவுப் போராட்டத்தின் விளைவாக முதலமைச்சர் பி. சி. ராய் இறங்கி வந்தது பல்வேறு பிரச்சினைகளில் வேறுபாடுகள் காங்கிரஸ் ஸ்தாபனத்தை அலைத்து வருவதுயாவும் நாடறிந்த விஷயங்கள்.

டெல்லி நகர சபைக் குள்ளேயே காங்கிரஸ் கோஷ்டிச் சண்டை தலைவிரித்தாடுகிறது ராஜ்ய மட்டத்திலும் இரு கோஷ்டிகள் மல்லுக்கு நிற்கின்றன.

கேரளத்திலோ வடக்கன் பாதிரியின் ஐக்கிய முன்னணி, முஸ்லீம் லீகுடன் கூட்டுச் சேர்வது இவை பற்றிக் காங்கிரஸ்காரருள் கருத்து வேற்றுமை இருக்கிறது. ராஜ்ய காங்கிரஸ் தலைமைக்காகப் போட்டி வேறு. சாக்கோ, பனம்பள்ளி முதலியோர் ராஜ்ய காங்கிரஸ் தலைவர் தாமோதர மேனனைக் காலை வாரிவிட முயல்கிறார்கள்.

இவ்வாறு நாடெங்கும் காங்கிரஸிற்குள் கோஷ்டிச் சண்டைகளும், பூசல்களும் மலிந்து வருகின்றன. இதில் இரண்டு விஷயங்கள் பிரதானமாகக் கவனிக்கத் தக்கவை. பதவிப் போட்டி முதலிய காரணங்களுக்காக நடக்கும் சண்டைகள் இருக்கின்றன. அதே பொழுதில் மக்களிடமிருந்து காங்கிரஸ் விலகிச் செல்வதாலும், ஜனநாயகத் தன்மை தேய்ந்து மாய்ந்துபோய் சொந்த ஸ்தாபனத்திலேயே தனிப்பட்டோர் செல்வாக்கு ஆதிக்கம் செலுத்துவதாலும ஸ்தாபனத்திற்குள்ளேயே எதிர்ப்பு வெடித்துள்ளது.

காங்கிரஸ் தலைமை இந்தப் போக்குகளைக் கண்டு கலகலத்துப் போயிருக்கிறது. அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் தேர்தல் விஷயத்தில் கூடப் பெரிய ஊசலாட்டம் ஏற்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியும் அரசாங்கமும் கடைப்பிடித்து வரும் கொள்கைகள் நடைமுறைகளின் நேரடி விளைவே இது என்று கூறினால் அது மிகையாகாது.

சோஷலிஸமும் மக்களும்

[ஐ. மாலிஷெவ்]

சமுதாயத்தில் மக்களின் பங்கை விவரிப்பதென்றால் அது ஏட்டில் அடங்காது. பாட்டாளிகளான மக்களே உலகினுக்கு உணவும் உடையும் தருகிறார்கள். நைல் நீர்ப்பாசன கால்வாய்களை வெட்டியவர்களும் ரோமாபுரியை கட்டியவர்களும சீன, இந்திய ஆலயங்களை அமைத்தவர்களும் மத்தியகால கிறிஸ்துவ மாதா கோயில்களையும் மாஸ்கோ கிரெம்லினை எழுப்பியவர்களும் எல்லா நகரங்களையும் தொழிற்சாலைகளையும் ஆலைகளையும் ரயில்வேக்களையும் சிருஷ்டித்தவர்களும் பாட்டாளி மக்களே.

சமுதாயத்தின் வரலாறு பாட்டாளி மக்களின் வரலாறேயாகும். ஆனால் அவர்களது சேவை ஒரே படித்தானதா யிருந்ததில்லை. சோஷலிஸ ஆட்சியின்கீழ் மக்கள் சதா முயன்றவாறும் உணர்வோடும் புதிய வாழ்வை ஆக்கித் தருகின்றனர். அவர்களது பெரும் முயற்சியால் சரித்திரமே விரைந்து ஓடுகிறது!

லெனின் தீர்க்கதரிசனம்

லெனின் எழுதினர். "சோஷலிஸ ஆட்சியின்கீழ் மட்டுமே துரிதமான, உண்மையான ஜன சமுத்திர முன்னேற்ற இயக்கம் முதலில் பெரும்பாலானமக்களின் ஆதரவுடனும் பிறகு மக்கள் அனைவரின ஆதரவுடனும் பொது வாழ்வு, தனிநபர் வாழ்வு ஆகியவற்றின் எல்லா துறைகளிலும் துவங்கும்."

விலங்குகள் தகர்ந்தன

மக்கள்மீது முதலாளித்துவம் திணித்திருந்த விலங்குகளை மாபெரும் அக்டோபர் புரட்சி தகர்த்தது. புது சமுதாயம், அரசியல் இவற்றை உருவாக்குவதிலும் புதிய உற்பத்தி முறைகள் காணுவதிலும் புதிய பண்பாட்டை அமைப்பதிலும் கோடானுகோடி மக்கள் பங்கு எடுக்குமாறு செய்த அந்த மாபெரும் புரட்சியே. சரித்திரத்தின் முன்பு காணாத வேகத்தில் இச் சாதனைகள் நடந்ததைக் கண்டு உலகமே திகைத்துவிட்டது. எல்லா பொருள்களையும் நேரே உற்பத்தி செய்யும் பாமர மக்கள்மேற்கொண்ட இந்தப் புது முயற்சியாலேயே சோஷலிஸம் வெற்றிகண்டது.

பாட்டாளிகளின் உற்சாகம்

உற்பத்தி சாதனங்கள் (தொழிற்சாலைகள், ஆலைகள், சுரங்கங்கள், நிலங்கள்) அரசாங்கத்தின் உடைமையானதாலும் சுரண்டும் வர்க்கங்கள் ஒழிக்கப்பட்டதாலும், தொழிலாளருக்கு உற்பத்திப்பெருக்கத்தில் நேரடியான சிரத்தை ஏற்பட்டது. தொழிலாளருக்கு புதிய உற்சாகமும் ஏற்பட்டது. இந்தப்புதிய உற்சாகம் முன்பு என்றுமே காணப்பட்டதல்ல. உவமையும் கூற முடியாது. எல்லா உற்பத்தி சாதனங்களும் பொது உடைமையாகவே, பொருளாதார அபிவிருத்திக்குத் திட்டங்கள் வகுப்பது அவசியமாயிற்று. சாதிக்கவும் ஆயிற்று. பழைய பொருளாதார முறைகள் போலன்றி, சோஷலிசத்தின் கீழ் தனிப்பட்ட நலன்களிடை முரண்பாடில்லை; ஒவ்வொருவரும் பொது லட்சியமொன்றுக்காக (கம்யூனிஸ லட்சியத்துக்காக) பாடுபட்டுக்கொண்டிருக்கின்றனர் என்பதால், அவ்வித முரண்பாடு இல்லை.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் பாட்டாளிகளின் உற்சாகத்திற்கு எல்லையே இல்லை. பாட்டாளிகள் உற்சாகத்துடன் பாடுபடுவதால் உலக சரித்திரத்திலே முன்பு காணாத அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது.

சோவியத் யூனியனில் அமோக உற்பத்தி

கடந்த ஆண்டு சோவியத் யூனியனில் தொழில் துறையில் உற்பத்தி, 1913ம்வருஷத்தைவிட 33 மடங்கு அதிகம்! அமெரிக்காவில் 4·1 மடங்கே அதிகம். பிரிட்டனில் 1·8 மடங்கும், பிரான்சில் 2 மடங்கும் அதிகம். என்ஜினீரிங் துறையில் ஆக்கவேலை அதே காலத்தில் சோவியத் யூனியனில் 200 மடங்கு கூடுதலாயிற்று; அமெரிக்காவில் 17 மடங்கும் பிரிட்டனில் 5.1 மடங்கும் பிரான்ஸில் 2.6 மடங்கும் கூடுதலாகும். மின்சார உற்பத்தியில் சோவியத் யூனியனில் 108 மடங்கு அதிகரிப்பு! அமெரிக்காவிலும் பிரான்ஸிலும் 29 மடங்கும பிரிட்டனில் 22 மடங்குகள்தான் அதிகரிப்பு.

இந்த 41 ஆண்டுகளில் 18 வருஷங்கள் போரிலும் போருக்குப் பின் புனர் நிர்மாண வேலைகளிலும் செலவிடப்பட்டன. அப்படியிருந்தும் மேலே கண்ட அபிவிருத்தி.

சோஷலிஸத்தின்மேன்மை

சமாதான காலத்தில் கைத்தொழில் உற்பத்தி விகிதம் உயர்வானதே. யுத்தத்திற்கு முந்திய பதினேரு ஆண்டுகளிலும் (1930-40) யுத்தத்திற்குப் பிந்திய பதினேரு ஆண்டுகளிலும் (1947–57) சராசரி வருஷாந்திர உற்பத்தி லாபம் சோவியத் யூனியனில் 16.2 சதவீதமும் அமெரிக்காவில் 2.7 சதவீதமும் ஆகும். இது முதலாளித்வத்தைவிட சோஷலிஸத்தின் கோட்பாட்டையே உணர்த்துகிறது.

அமெரிக்காவை ரஷ்யா முந்துகிறது

இந்த உயர் நிலையை சோஷலிஸம் பரவாத நாடுகளிலுள்ள மக்களும் ஒப்புக் கொள்கின்றனர். அமெரிக்கப் பொருளாதாரநிபுணரான ஹென்றி எல். ராபர்ட்ஸ் எழுதிய "ரஷ்யாவும் அமெரிக்காவும்" என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்:–" கைத்தொழில் துறையிலும்சிகரதேசியஉற்பத்தியிலும் 1928 ஆண்டு முதல்சோவியத் யூனியனே அமெரிக்காவைவிட துரிதமாக அபிவிருத்தி அடைந்திருக்கிறது. இந்த அபிவிருத்தி அமெரிக்கா 1860 முதல் 1900 வரை மிகத் துரிதமாக அடைந்த அபிவிருத்தியைவிட துரிதமானதே".

மக்களேதங்கள் நாட்டின் உண்மையான எஜமானர்கள். அம்மக்களை முன்னேற்றின் ஏஜண்டுகளாக்கஅவசியமானநிலைமைகளை சோஷலிஸ்ட் ஜனநாயகம் முதல் தடவையாக சிருஷ்டித்தது. இதுவே சோஷலிஸத்தின் தனிசிறப்பு; இதுவே சோவியத் பலத்தின் அடிப்படை.

மக்கள் மேன்மேலும் புது முயற்சிகளில் ஈடுபட சாதகமான சூழ்நிலை சிருஷ்டிக்கப்பட்டது. தொழில்களின் நிர்வாக முறை மாறியது. கூட்டுப்பண்ணை முறை அபிவிருத்தி செய்யப்பட்டது. உற்பத்தி பெருக்கிலும் பொது வாழ்விலும் தொழிற்சங்கங்கள் அதிக பங்கு எடுத்தன. இவற்றால் ஸ்தல ரீதியாக மக்கள் தாமாகவே முன்முயற்சி செய்ய வாய்ப்பு ஏற்பட்டது. நாட்டின் பலமும் செல்வமும் பெருகின. இதனால் இன்று சோவியத் யூனியன் 11 நாட்களில் 1913 வருஷம் முழுவதிலும் ஜார் ஆட்சியிருந்த ரஷ்யா உற்பத்தி செய்ததைவிட அதிகமாக உற்பத்தி செய்கிறது.

விவசாய வளர்ச்சி

சோஷலிஸத்தால் விவசாயமும் வளர்ச்சி யுற்றது. 23 சமாதான ஆண்டுகளில் விவசாய உற்பத்தி சோவியத் யூனியனில் வருஷந்தோறும் 4·3 சதவீதம் அதிகரித்தது; அமெரிக்காவில் 1·2 சதம் அதிகரிப்பு. கடந்த சில ஆண்டுகளில் உற்பத்தி மேற்கொண்டும் அதிகரித்தது. 1954-57 இவ்வாண்டுகளில் வருஷம் 7·1 சதம் சோவியத் யூனியனிலும் 1·1 சதம் அமெரிக்காவிலும் அதிகரிப்பு ஏற்பட்டது.

இந்த ஆண்டு நமது கூட்டுப் பண்ணைகள் 1953-ல் விற்றதைவிட 2 கோடியே 38 லட்சம் டன் அதிக தானியங்களை சர்க்காரிடம் விற்றன.

கர்மவீரர்கள் அனந்தம்

மக்களின் ஆர்வமே இந்த அபிவிருத்திக்குக் காரணம் சோஷலிஸத்தின் கீழ் யந்திரமானது வேலையைச் சுலபமாக்குகிறது. ஆனால் புதுமுறைகளைக் கண்டு பிடித்து உற்பத்தியைப் பெருக்குவோர்மக்களே. சோஷலிஸஆட்சியில் பாட்டாளிகள், தொழில் நுட்பநிபுணர்கள் புத்தம் புதிய வழிமுறைகளைக்கண்டுபிடிப்பதில் ஆர்வத்துடன் முனைந்திருக்கின்றனர். ஐந்தாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் என். குஸ்மின் என்ற ஆப்பரேட்டர் 25 ஆண்டுகளில் சாதிக்கக்கூடியதை ஐந்தாண்டில் சாதித்தார். அவர் தமது வேலையை நிறைவேற்றுவதில் தமக்குள்ள முழு அறிவையும் திறமையையும் பயன்படுத்தி புது யுக்திகளைக் கண்டுபிடித்ததாலேயே அவ்விதம் உற்பத்தியைப் பெருக்க முடிந்தது.

குஸ்மின் போன்ற கர்மவீரர்கள் சோஷலிஸத்தின் தூண்கள்.

முதலாளி உலகத்திலிருந்து வருவோர், இந்த மக்கள் இயக்கத்தைக் கண்டு ஆச்சரியமடைகின்றனர். சாதாரண தொழிலாளி ஒருவர் ஏன் தமது வேலையை இவ்வளவு உற்சாகத்துடன் செய்கிறாரென்பது அவர்களுக்குப் புரியவில்லை. காரணம் இதுவே: சோஷலிஸ சமுதாயத்தில் 'சாதாரண தொழிலாளி' தனக்காகவே வேலை செய்கிறார்; அவர் சோஷலிஸத்தைச் சிருஷ்டிப்பதில் தமது பங்கை நிறைவேற்றவிரும்புகிறார். அவர் தமது திறமைகளைப் பயன்படுத்த ஒவ்வொரு சந்தர்ப்பமும் அளிக்கப்படுகிறது.

பூர்ஷ்வா சித்தாந்தம் தகர்ந்தது

பாமர மக்களால் பொருளாதார அபிவிருத்திக்கு நிர்மாண முறையில் [illegible]துவும் சாதிக்க முடியாதென்ற பூர்ஷ்வா சித்தாந்தம் தகர்ந்துவிட்டது. ஆனால் மக்களின் முயற்சியே புது சமுதாயத்தின் அடிப்படை என்றும் நிர்மாணரீதியான சோஷலிஸம் மக்களால்தான் உருவாக்கப்படுமென்றும் லெனின் கூறியிருக்கிறார்.

சோவியத் பொருளாதார திட்டங்கள் உலகினை ஆச்சரியப்படச் செய்தன. புதிய ஏழாண்டு திட்டம் முந்திய எல்லா சாதனைகளையும் மிஞ்சுவதாகவிருக்கும். உலகமே பிரமிக்கப் போகிறது.

சோஷலிஸ நாடுகளின் சாதனைகள்

சோஷலிஸம் உலகில் பரவிவிட்டது. சோவியத் யூனியனின் கைத்தொழில் அபிவிருத்தி போல் இதர சோஷலிஸ நாடுகளிலும் கைத்தொழில் அபிவிருத்தி உண்டு. 1937-ம் ஆண்டில் உற்பத்தி 100 என்ற அடிப்படையில் சோஷலிஸ நாடுகளிலும் முதலாளித்துவ நாடுகளிலும் கண்ட உற்பத்தி அளவு பின்வருமாறு:

	சோஷலிஸ நாடுகள்	முதலாளித்வ நாடுகள்
1950	365	141
1955	706	189
1957	[illegible]	202

இதிலிருந்து சோஷலிஸ நாடுகள் உற்பத்தியில் முதலாளித்துவ நாடுகளை முந்தி வருகின்றனரென்பது தெளிவு.

சரித்திர சிற்பிகள் யார்?

மக்களே சரித்திரத்தை உண்மையில் சிருஷ்டிப்பவர்கள் என்பதற்கு இது சிறந்த அத்தாட்சி. சோஷலிஸத்தை எதிர்ப்பவர்கள் இதை ஒப்புக்கொள்கிறார்கள். இந்த 20-வது நூற்றாண்டில் பொது மக்களே சரித்திரத்தை நிர்மாணிப்பவர்களாகி விட்டனரென்று கார்ல் ஜாஸ்பெர்ஸ் என்ற ஜெர்மன் தத்துவ சாஸ்திரி முடிவில் உணர்ந்துவிட்டார்.

வருங்காலம் சோஷலிஸத்திற்கே உரியதாகிவிட்டது. மிக்க முற்போக்கான பொருளாதார முறை சோஷலிஸமே. சோவியத் யூனியனுக்கும்மக்களின் ஜனநாயகங்களுக்கும் நெருக்கடி ஏற்படவே மாட்டாது. ஏன்? மக்களின் லௌகிக, கலாச்சாரத் தேவைகள் அதிகபட்சம் பூர்த்தி செய்யப்படுவதன் அடிப்படையில் மக்களின் சினேகபாவமான ஒத்துழைப்பின் பேரில் சோவியத் யூனியன், மக்கள் ஜனநாயகங்கள் இவற்றின் முன்னேற்றம் அமைந்திருக்கிறது.

அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சி சோவியத் யூனியன் மக்களுக்கு மட்டுமன்றி உலகம் முழுவதற்கும் ஒரு திருப்பத்தை ஏற்படுத்திவிட்டது. அப்புரட்சி காட்டிய பாதையில் சோஷலிஸ நாடுகள் அனைத்தும் நடக்கின்றன. அந்தப் பாதையிலேயே மானிட குலம்முழுவதற்கும் செல்லவேண்டும். சோஷலிஸ நாடுகளின் முன்மாதிரியே எந்நாட்டிலுமுள்ள மக்களுக்கு ஆதர்சம் உண்டு பண்ணுகிறது; அம்மக்களுக்கு அவர்களது பலத்தில் நம்பிக்கையை அந்த முன்மாதிரியே பலப்படுத்துகிறது; சுரண்டல்கள், அடக்குமுறைகள் இவற்றிலிருந்து விடுதலை நிச்சயம் என்ற நம்பிக்கையையும்அந்தமுன்மாதிரியே பலப்படுத்துகிறது. (நியூ டைம்ஸ்)

ஆசிரியருக்குக் கடிதங்கள்

சிறையிலே மகிழ்ச்சி

ஐயா,

20 ஆண்டு காலமாக எத்தனையோ அடக்குமுறைகளுக்கும் பண நெருக்கடிகளுக்குமிடையே பாட்டாளி வர்க்கத்திற்காக இடைவிடாது உழைத்து வந்த ஜனசக்தி இதழ் பெரிய அளவில் வருகிறது என்று என்னைப்பெற்ற தாயின் மூலம் கேட்டு மகிழ்ச்சிக் கடலில் திளைத்து மூழ்கினேன். வாழ்க ஜனசக்தி! வளர்க பாட்டாளி வர்க்கம்!

வி. கே. கணேசன்,
மத்திய சிறை, வேலூர்.

தண்ணீர்க் குழாய் காணோம்!

கோடம்பாக்கம பவர் ஹவுஸிற்கு எதிரில் கார்ப்பொரேஷன் தண்ணீர்க் குழாய் ஒன்று இருந்தது. அது தண்ணீர் வசதி இல்லாத அப்பகுதி மக்களுக்கு, குறிப்பாக தாய்மார்களுக்கு வசதியாய் இருந்தது. 15-11-58-லிருந்து காணவில்லை. விசாரித்ததில், அங்கிருந்து சில கெஜதூரத்தில் அமைக்கப்பட்டிருக்கும் "மீனும்பாள் சிவராஜ் நகர்" வீடுகளை திறப்பு விழா நடத்த மந்திரிகளும், அதிகாரிகளும் வருவதற்கு அழகுபடுத்த குழாயை எடுத்து விட்டதாக பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். எவ்வளவோ பொருட் செலவும் உழைப்பும் செலவழித்து போட்ட குழாயை சில மணி நேர அழகுக்காக எடுப்பது நியாயமா? புது குழாய்கள் போடுவது ஒருபுறமிருக்க, போட்ட குழாயை எடுப்பது நல்லதா?

எஸ். வி. கௌரிசங்கர்,
கோடம்பாக்கம்.

சுகாதார அதிகாரிகள் கவனிப்பார்களா?

சிதம்பரம் தாலூகா புவனகிரி பஞ்சாயத் போர்டுக்கு வருட வருமானம் ரூபாய் 50000. மழை பெய்தால் தெருவில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. தெருவின் இருபுறங்களிலும் முட்செடிகள் படர்ந்து உள்ளன. சாக்கடைத் தண்ணீர் நாற்றம் எடுக்கிறது. பூங்காவில் பொது மக்கள் உட்கார வசதியில்லை. இதுவரை, இவைகளுக்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இதனை சுகாதார அதிகாரிகள் உடனே கவனிக்க வேண்டும்.

கே. ரெங்கநாதன்,
புவனகிரி.

ஆவடி சோஷலிசம் இதுதானா?

அரூர் தாலுக்காவைச் சேர்ந்த தீர்த்தமலை பிர்க்காவில் நில அடமான விசேட அதிகாரிகள் குழு ஏற்படுத்தி 1½ வருடங்களாகி விட்டன. ஆனால் இதுவரையில் 50 சதவீத நிலம்கூட அடமானம் செய்யப்படவில்லை. 10 சென்ட் நிலத்தை அடமானம் செய்ய வேண்டியிருந்தால்கூட லஞ்சமில்லாமல் நடைபெறுவதில்லை. லஞ்சம் கொடுக்க மறுக்கிறவர்கள் மீது 7ம் செ. நோட்டீஸ் கொண்டு வருகிறார்கள். ஆவடி சோஷலிசம் கோரும் லட்சணம் இது தானா என்று மக்கள் பேசிக் கொள்கின்றனர். 7 லட்சம் தரிசு நிலங்களைப் பங்கிட்டுக் கொடுக்கும் கேரளத்தைப் பார்த்தாவது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

எஸ். எஸ். சடையப்பன்,
அரூர்.

கண்மாய் உள்வாய் நிலம் விஸ்தரிக்க வேண்டும்

இராமநாதபுரம் ஜில்லா அருப்புக்கோட்டைத் தாலூகா கூத்திப்பாரை, மலைப்பட்டி பெரிய கண்மாய் உள்வாய் நிலம் 1902-ம் வருடத்திற்கு முன் 90 ஏக்கர் 92 சென்ட் இருந்தது. இராமேஸ்வர தேவஸ்தானம் இதில் 72 ஏக்கர் 4 சென்ட் எடுத்துப் பட்டா செய்து கொடுத்துவிட்டது. இப்போது உள்வாய் நிலம் 18 ஏக்கர் 88 சென்ட்தான் இருக்கிறது. இதில் தேக்கி வைக்கும் தண்ணீரை நம்பி 75 ஏக்கர் நஞ்சை நிலம் இருக்கிறது.

இதை விஸ்தரிக்கும்படி மகஜர்கள் கொடுத்தும் கலெக்டரைப் பார்த்தும் பல முயற்சிகள் செய்தும் பெயருக்கு அதிகாரிகள்வந்து போனார்களே தவிர வேறு உருப்படியாக ஒன்றும் நடக்கவில்லை. இதுபற்றி சர்க்கார் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எம். கோபால்,
மலைப்பட்டி.

கேள்வி-பதில்

கே. எம்.

சீன விவசாய அற்புதம்

சீனிவாசன் ஜே பாண்டியபுரம், பெரியசாமி நாடார், உடுமலை, இன்னும் பலர்.

கேள்வி: சீனாவில் ஒரு ஏக்கராவில் இதுவரை நாம் கண்டும் கேட்டுமிராத விதத்தில் உற்பத்தியாவதாக செய்தி வந்ததே! அவை உண்மையா?

பதில்: அந்தச் செய்திகள் நவசீனத்திலிருந்து வரும் ஏடுகளிலிருந்து எடுத்துக் கொடுக்கப் பட்டவை. அதன் விபரங்களையும் அத்தகைய விளைச்சல் எவ்வாறு அங்கு நடைபெறுகிறதென்பதையும் கேட்டு சீன ஸ்தானிகராலயத்திற்கு எழுதி இருக்கிறோம். பதில் வந்ததும் பிரசுரிப்போம்.

ஜனசக்தியில் வெளியான மேற்கூறிய செய்திகளை ஊர்ஜிதம் செய்யும் விதத்தில் சமீபத்தில் சீனா சென்று திரும்பிய இந்தியாவின் விவசாய அமைச்சர் பஞ்சாபராவ் தேஷ்முக்கும் பேசியிருக்கிறார்.

"சீனத்தில் அரிசி உற்பத்தியில் புதிய சாதனைகள்" என்ற தலைப்பில் "சீனா-படரூபத்தில்" (China Pictorial) என்ற ஏட்டில் சமீபத்தில் இதுபற்றிச் சில விபரங்கள் பிரசுரமாகியுள்ளன. ஹூபே மாகாணத்தில், சியோக்கன் என்ற பிரதேசத்தில், ஆவோசியன் என்ற ஊரில் 1·44 மோவில் 15665 அரிசி 'காட்டி'கள் உற்பத்தியாகியுள்ளது; சியன்கூ என்ற ஊரில் 10.16 மோவில் 36,956 காட்டிகள் அரிசி உற்பத்தியாகி இருக்கிறது என்று எழுதுகிறது. ஒரு மோஎன்பது ·1647 ஏக்ரா என்றும். ஒரு காட்டி என்பது 1·1023 பவுண்டு என்றும் அதே விளக்கக் கட்டுரையின் கீழ் தரப்பட்டுள்ளது.

ஒரு டன்னுக்கு 2240 பவுண்டு என்ற அடிப்படையில் கணக்கிட்டால் மேற்கூறிய பரீட்சார்த்த பண்ணையில் ஒரு ஏக்கராவிற்கு 32.74 டன் என்றாகிறது. இரண்டாவது பண்ணையில் இதுபோல் கிட்டத்தட்ட இரண்டு மடங்காகிறது.

ஒரு ஏக்கரில் இந்த அளவு உற்பத்தி என்பது நமக்கு ஆச்சர்யத்தை உண்டு பண்ணும். இதன் விபரங்கள் கிடைத்ததும் பின்னர் வெளியிடுவோம்.

பிரெஞ்சு தேர்தல் விபரீதம்

[கே. முத்தையா]

பிரான்ஸ் நாட்டில் மொத்தம் பதிவான வாக்குகளில் கணிசமான அளவு வாக்குகள் பெற்றபோதிலும் கம்யூனிஸ்டுகளுக்குக் குறைவான ஸ்தானங்களும், குறைவான வாக்குகள் வாங்கியவர்களுக்கு அதிக ஸ்தானங்களும் கிடைத்ததாக செய்தி வந்தது. இதன் விவரங்களையும், இந்த நிலைமை ஏற்பட்டதற்குக் காரணமென்ன என்பதையும் விளக்குவீர்களா? எனக் கேட்டு பல தோழர்கள் எழுதியுள்ளார்கள்.

பிரெஞ்சுத் தேர்தலின் இறுதி முடிவு பின்வருமாறு:

டிகால் கட்சிக்கு கிடைத்த வாக்குகள் 47,69,052. மொத்தம் பதிவான வாக்குகளில் இது 26·47 சதவிகிதமாகும். கிடைத்த ஸ்தானங்கள் 188.

கன்சர்வேட்டிவ்களு(வலதுசாரி கட்சி)க்குக் கிடைத்த வாக்குகள் 42,50,039. மொத்தம் பதிவான வாக்குகளில் இது 23 64 சதவிகிதம். கிடைத்த ஸ்தானங்கள் 133

கம்யூனிஸ்டுக் கட்சிக்குக் கிடைத்த வாக்குகள் 37,41,384. இது மொத்தம் பதிவான வாக்குகளில் 20·76 சதவிகிதம். கிடைத்த ஸ்தானங்களோ 10 தான்.

சோஷலிஸ்டுக் கட்சிக்கு கிடைத்த வாக்குகள் 24,84,417. இது 13·79 சதவிகிதமாகும். ஆனால் கிடைத்தஸ்தானங்கள் 40

எம். ஆர். பி. கட்சிக்கு (கத்தோலிக் கட்சிக்கு) கிடைத்த வாக்குகள் 13,65,064 இது 7 58 சத விகிதம். ஆனால் கிடைத்த ஸ்தானங்கள் 57. (சத விகிதத்தில் சோஷலிஸ்ட் கட்சியைவிடக் குறைவான வாக்குகள் வாங்கிய போதிலும் அவர்களைவிட அதிக ஸ்தானங்கள் பெற்றுள்ளார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.)

ராடிக்கல் கட்சிக்கு 3,62,784 வாக்குகள் அதாவது 2 சத விகிதம்தான். ஆனால் கிடைத்த ஸ்தானங்களோ 37.

இவையே இறுதி முடிவுகள்.

விபரீதம்

2 சத விகிதம் வாக்குகள் வாங்கிய ஒரு கட்சிக்கு 37 ஸ்தானங்களும், 21 சதவிகிதம் வாக்குகள் வாங்கிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 10 ஸ்தானங்களும் கிடைத்தது விந்தையல்லவா?

ஆனால் இத்தகைய விந்தையான முடிவைக்காணவே, டிகால் தேர்தல் சட்டங்களையும், தொகுதி அமைப்பு முறைகளையும் வேறு எந்தக் கட்சியையும் கலக்காமல் திருத்தி அமைத்து, அதில் வெற்றியும் கண்டுள்ளார், எவ்விதம்?

நம் நாட்டில் உள்ளதுபோல் ஒரே ஒரு தேர்தல் நடத்தி அதில் யாருக்கு மெஜாரிடி கிடைக்கிறதோ அவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்ற முறை அங்கில்லை. இங்கு எத்தனைகட்சிகள் போட்டியிட்டாலும் சரி அதில் அதிகம் வாக்குப் பெற்றவர் வெற்றியடையலாம். இத்தகைய முறை அங்கில்லை.

இரண்டாவது யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்ட அரசியலமைப்பில் விகிதாசாரப்பிரதிநிதித்துவம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது. அதன் பிரகாரம் பார்த்தால் இன்று டிகால் கட்சிக்கு 26 சத வாக்கு கிடைத்ததால் மொத்த ஸ்தானங்களிலும் அதே சத வீத ஸ்தானங்கள் தான் அதாவது மொத்தமுள்ள465ஸ்தானங்களில் 125 ஸ்தானங்கள்தான் கிடைத்திருக்கும். 21 சதவிகித வாக்குகள் வாங்கிய கம்யூனிஸ்ட் கட்சி [illegible] சத விகிதம் ஸ்தானங்கள் அதாவது 98 ஸ்தானங்கள் பெற்றிருக்கும். இதே வீதாசாரத்தில் ஏனைய கட்சிகளும் ஸ்தானங்களைப் பெற்றிருக்கும். ஆனால் பிரெஞ்சு சோஷலிஸ்டுகளின் ஆதரவுடன் டிகால் பதவிக்கு வந்தவுடனேயே பழைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை ரத்து செய்தார்.

அதே சோஷலிஸ்டுகளின் ஆலோசனையின் பேரில் புதிய தேர்தல் முறை ஒன்றை வகுத்தார். கம்யூனிஸ்டுகளைத் தோற்கடிக்கும் பணியை இலகுவாக்குவதே இந்தத் தேர்தல் முறை!

இதன் பிரகாரம் தொகுதிகள் பிரிக்கப்பட்டன. கம்யூனிஸ்டுகள் முன்பு எங்கெல்லாம் ஜெயித்தார்களோ அந்தத் தொகுதிகள் ஐந்து அல்லது ஆறு கூறுகளாக ஆக்கப்பட்டன. பெருவாரியாக தொழிலாளிகள் ஏழை மக்கள் வாழும்பகுதிகள்தான்கம்யூனிஸ்டுகளைத் தேர்ந்தெடுத்த பிரதேசங்கள். இவைகள் பிரிக்கப்பட்டு ஏனைய மத்திய மேல்தட்டுக்காரர்கள் வசிக்கும் பிரதேசங்களுடன் இணைக்கப்பட்டன.

ஒரு தேர்தல் தொகுதி இது என்று சொல்வதற்கே கூட தகுதியில்லாத விதத்தில் பிரிக்கப்பட்டது. கம்யூனிஸ்டுகள் எந்தத் தொகுதியிலும் 51 சத விகிதம் வாங்க முடியாதவண்ணம் தொகுதிகள் சிதைக்கப்பட்டன.

பழைய விகிதாசார முறையும் ரத்தாகியது. தொகுதிகளும் சின்னாபின்னம்! இத்துடன் தேர்தல் இரண்டு முறை நடத்தப்பட்டது. முதலில் ஒரு தேர்தல், அது நடந்த ஒரு வாரங்கழித்து அதே வாக்காளர்கள் மறுபடியும் ஓட்டுச் சாவடிக்குச் சென்று ஓட்டளிக்கவேண்டும்.

முதலில் நடந்த தேர்தலில் ஒரு தொகுதியில் பதிவான ஓட்டில் மெஜாரிடி பெற்றவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதன் பிரகாரம் முதல் தேர்தலில் மொத்தம் 465 ஸ்தானங்களில் 39 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பாக்கியுள்ள 426 ஸ்தானங்களில் போட்டியிட்டவர்களில் அதிகம் ஓட்டு வாங்கியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை.

இந்த முதல் தேர்தலில் நிலவரம் தெரிந்துவிடும். எந்தத் தொகுதியில் யாருக்கு எவ்வளவு ஓட்டு என்பது தெரியும். இதன் பிறகு ஒருவார அவகாசம் கொடுக்கப்படுகிறது.

ஒரு தொகுதியில் முதல் தேர்தலில் ஒரு கம்யூனிஸ்டுக்கு 45 வாக்குகளும், ஒரு டிகால் ஆதரவாளனுக்கு 35 வாக்குகளும், ஒரு சோஷலிஸ்டுக்கு 20 வாக்குகளும் கிடைத்தன என்று வைத்துக் கொள்வோம். புதிய தேர்தல் விதியின் பிரகாரம் கம்யூனிஸ்டுக்கு 51 ஓட்டுக் கிடைக்காததால் அவர் தேர்ந்தெடுக்கப்படமாட்டார்.

இரண்டாவது தேர்தல் ஒரு வாரத்திற்கு பிறகு நடக்கும். இதில் சோஷலிஸ்டு அல்லது டிகால் கட்சி ஆள் வாபஸ்வாங்கிக் கொள்வார்; வாபஸ் வாங்கியவர் மற்றவரை ஆதரிப்பார்; கம்யூனிஸ்டை முறியடிப்பார்.

இவ்வாறே கம்யூனிஸ்டுகள் தவிர டிகாலின் ஏகாதிபத்தியக் கொள்கைக்கு ஆதரவளித்த மற்ற பிற்போக்காளர் முற்போக்கு வேஷம் போடுபவர்கள் அனைவரும் இரண்டாவது தேர்தலில் சேர்ந்து கொண்டனர். டிகால் மிரட்டலுக்குப் பணிந்து சேர்ந்து நின்று கம்யூனிஸ்டுகளைத் தோற்கடித்தனர். அதனால்தான் 2 சதவிகிதம் வாக்குகள் வாங்கிய ராடிக்கல் கட்சி 37 ஸ்தானங்கள் பெற முடிந்தது. 21 சதவிகிதம் வாக்குகள் பெற்ற கம்யூனிஸ்டுக் கட்சி 10 ஸ்தானங்களையே பெற்றது.

ஒரே ஒரு உதாரணம். தோழர் ஜேக்விஸ் டுக்ளோ என்பவர் பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சியில் இரண்டாவது பெருந்தலைவர் இவருக்கு முதல் தேர்தலில் 21,049 வாக்குகள் கிடைத்தன. இவரை எதிர்த்து நின்ற டிகால் அபேட்சகருக்கு 18,118 வாக்குகளும், சோஷலிஸ்டுக் கட்சி அபேட்சகருக்கு 10,416 வாக்குகளும் கிடைத்தன. முதல் தேர்தலில் தோழர் டுக்ளோ [illegible] வர்களைவிட அதிகம் வாக்குகள் பெற்றபோதிலும் பதிவான வாக்குகளில்51 சதவிகிதம் வாக்குகள் கிடைக்காததால் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

கூட்டுச்சதி

அடுத்த வாரத்தில் நடந்த இரண்டாவது தேர்தலில் சோஷலிஸ்டு அபேட்சகர் டிகால் அபேட்சகர்களுக்குச் சாதகமாக விட்டுக்கொடுத்து போட்டியிலிருந்து வாபஸ் வாங்கிக்கொண்டு அவரை ஆதரித்தார்.

இரண்டாவது தேர்தலில் டுக்ளோவிற்கு 21,252 வாக்குகள் கிடைத்தன; டிகால் அபேட்சகருக்கு 29,662 வாக்குகள் கிடைத்து அவர் டுக்ளோவைத் தோற்கடித்தார். இந்த நாடகம் ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றிகரமாக நடந்தேறியது. இதையும் மீறியே 10 கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றனர்.

இதுதான் பிரெஞ்சு சோஷலிஸ்டுகள் செய்த துரோகத்தின் விளைவு. சோஷலிஸ்டுகளாவது முன்னேறினார்களா என்றால் இல்லை. முந்திய பார்லிமெண்டில் 98 ஸ்தானங்களைப் பெற்றிருந்த அவர்களுக்கு இப்பொழுது 40 ஸ்தானங்கள்தான் கிடைத்தன.

சுருங்கச் சொன்னால் டிகாலின் சர்வாதிகார ஆட்சியில் ஒவ்வொரு டிகால் ஆதரவாளனையும் தேர்ந்தெடுக்க 19,000 வாக்குகள் இருந்தால் போதும்; ஆனால் ஒரு கம்யூனிஸ்டைத் தேர்ந்தெடுக்க 3,88,000 வாக்குகள் தேவையாயிற்று.

இதுதான் அங்கு இன்று ஏற்பட்டிருக்கும் புதிய ஆட்சியின் சொரூபம்.

1857ம் வருட இந்தியப் புரட்சிபற்றிய பாடல்கள்

பி. ஸி. ஜோஷி சேகரித்தவை ரஷ்ய மொழியில் தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளன

மாஸ்கோ, டிச. 5—"1857-1859ம் வருட இந்திய எழுச்சிபற்றிய பாடல்கள்" என்ற தொகுப்பு நூல் ஒன்றை சோவியத் யூனியன் விஞ்ஞானப் பேரவையின் கீழ்த்திசைக் கழகத்தார் வெளியிட்டுள்ளனர். இந்திய எழுத்தாளர் பி. ஸி. ஜோஷி இப்பாடல்களை சேகரித்து மேற்படி கழகத்திற்கு வழங்கியிருந்தார்.

இத்தொகுப்பில் வெவ்வேறு காலத்தைச் சேர்ந்த பல கவிதைகளும், புரட்சியில் நேரடியாகப் பங்குகொண்டவர்கள் அவர்களுடைய சந்ததிகளுக்கு, எழுத்து வடிவம் பெறாத பாடல்களாக விட்டுச் சென்ற பல பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளன. நீண்ட காலமாக கிராமியப் பாடல்களாக பிரபலமடைந்துள்ள சுரஜ்மாலின் கவிதைகளும் ஜாவல்ராமின் கவிதைகளும் இதில் இடம்பெற்றுள்ளன. இவையாவும் முதற் தடவையாக ரஷ்ய மொழியில் வெளியாகியுள்ளன.

இத் தொகுப்பு நூலின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல், இந்திய கிராமியப் பாடல்களை சோவியத் வாசகர்கள் அறிந்துகொள்வதற்கும், இந்தியாவின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பாடல்களைப்பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்கும் இப்பிரசுரம் மிகவும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. —டாஸ்.

காளீஸ்வரா மில்லைக் கலைக்க உத்திரவு!

ஸீட்டோ, பாக்தாத் உடன்படிக்கைகள்

பிரதமர் நேரு கண்டனம்

புதுடில்லி, டிச. 8—

ஸீட்டோ-பாக்தாத் ராணுவ உடன்படிக்கைகள் ஏற்பட்டு பகுதி[illegible]ம் பாதுகாப்பு ஏற்படுத்துவ[illegible]லை என்றும் அதற்குமாறாக [illegible] அளவில் பாதுகாப்பின்மை[illegible] அமைதியின்மையையுமே ஏற்படுத்தியிருக்கின்றன என்றும் [illegible] நாடுகளின் [illegible] ஏற்படுத்தியிருக்கும் [illegible] தென்றும் மக்கள் சபையில் குறிப்பிட்டு வெளி விவகாரங்களைப்பற்றிய விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் பிரதமர் நேரு கூறினர். தன்னுடைய கருத்துப்படி அக்கையை ஒப்பந்தங்கள் செயலிழந்து விட்டன [illegible] ஒன்றும் [illegible] அவற்றை நீடித்து வைக்கவே [illegible] அதன் [illegible] ஏற்பட்டிருக்கிறது என்றும் நேரு கூறினர்.

[illegible] பற்றிக் குறிப்பிடுகையில் [illegible] உலகத்தின் மிகச் சிக்கலான பிரச்னைகளில் இது ஒன்று என்றும் இதில் பெரும் மோதுதலுக்கான வித்துக்கள் எப்போதுமே இருந்து வந்திருக்கின்றன என்றும் [illegible] ஆண்டுகளுக்குப்பின் இப்பிரச்னை [illegible] விட்டதென்றும் நேரு கூறினர்.

அண்மைக் காலத்தில் [illegible] சுதந்திரம் பெற [illegible] சிறிது [illegible] தென்படுவதாயும் இதனுல் போராட்டம் வலுக்கவே வகை ஏற்படுமென்பதால் அது துரதிருஷ்டவசமானதென்றும் நேரு கூறினர்.

அணுகுண்டு தடை, நிராயுத[illegible] இவை சம்பந்தமாக நடக்கும் மகாநாடுகள் எப்படியோ தடையின்றி நடக்க வழி காணப்படும் என்றும் சிறிய அளவில் உடன்பாடு ஏற்படும் என்றும் தாம் எதிர்பார்ப்பதாயும் அணுகுண்டு சோதனை நிறுத்தம் பற்றி வந்த தகவல் சிறிது நம்பிக்கையளிப்பதாகவும் நேரு கூறினர்.

வினோபாஜி - நேரு சந்திப்பு
டிசம்பர் 17, 18ல்

ஆமதாபாத், டிச. 8—

ஆமதாபாத் ஜில்லாவில் டிச. 17, 18 தேதிகளில் பிரதமர் நேரு ஆசார்ய வினோபாவேயைச் சந்தித்து 6-30 மணி நேரத்திற்கு அதிகமாகப் பேசுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பூதான அலுவலகம் இங்கு அறிவித்தது.

பிரதமர் நேரு டில்லியிலிருந்து விமான மூலம் 17ந் தேதி காலை 10 மணிக்கு ஆமதாபாத் வந்து சேருவார். உடனே அவர் இங்கிருந்து 37 மைல் தூரத்தில் வினோபாஜி தங்கியிருக்கும் இடத்திற்குச் செல்வார். அவருடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய பிறகு, இருவரும் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுவர்.

நேரு-வினோபாஜியின் இந்த சந்திப்புக்கு பூதான இயக்கத்தினர் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். இதற்கு முன்னுல் சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் மைசூர் ராஜ்யத்திலுள்ள எல்வால் என்ற இடத்தில் இந்த இரு தலைவர்களும் சந்தித்தனர்.

தேசீய மாணவர் படை நாள்
ஜலண்டு மைதானத்தில் சிறப்பான அணிவகுப்பு

சென்னை, டிச. 8—

தேசீய மாணவர் படை (என். ஸி ஸி.) நாளையொட்டி நேற்று ஜலண்டு மைதானத்தில் சிறப்பானதொரு அணிவகுப்பு நடைபெற்றது. சென்னை நகரிலுள்ள கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகளைச் சேர்ந்த என். ஸி ஸி. படையினர் சுமார் ஆயிரம் பேர் இவ்வணி வகுப்புகளில் கலந்து கொண்டனர்.

சென்னை மேல்சபைத் தலைவர் டாக்டர் பி. வி. செரியன் விழாவுக்குத் தலைமை வகித்து அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

சென்னை ராஜ்யத்தில் என். ஸி ஸி. படையின் அமைப்பு வேலை முதலியன பற்றி லெப். கர்னல் பணிக்கர் ஒரு அறிக்கையை வாசித்தார்.

இந்திய ஜனதிபதி, பிரதமர் நேரு மற்றும் பலரிடமிருந்து வாழ்த்துச் செய்திகள் வந்திருந்தன.

படையினரின் பல்வேறு விளையாட்டு நிகழ்ச்சிகளைப் பொது மக்கள் கண்டுகளித்தனர்.

இந்தியா-பாக் உறவுகள் மிக நெருக்கடியான கட்டத்திலுள்ளன

மக்கள் சபையில் நேரு பேச்சு

புதுடில்லி, டிச. 8—

"இந்தியா-பாக் உறவுகள், இப்பொழுது பாகிஸ்தானில் உள்ள நிலைமைகள் காரணமாக மிகவும் நெருக்கடியான கட்டத்திலுள்ளன. ஏனெனில் அங்கு அமுலிலுள்ள ராணுவச் சட்டம் அரசாங்க நடவடிக்கை மேலுள்ள பல்வேறு கட்டுப்பாடுகளை நீக்கியிருக்கிறது. அவ்வாறு கட்டுப்பாடுகள் நீக்கப்படுகையில் அந்தக் கணத்தில் உள்ள தன்மையைப் பொறுத்தே நிலைமைகள் இருக்கும்" இவ்வாறு பிரதமர் நேரு இன்று மக்கள் சபையில் அறிவித்தார்.

வெளி விவகாரங்கள் பற்றிய விவாதத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் எல்லைப்புறத்தில் நடைபெற்ற சில சம்பவங்கள் 'சிறிய வெடிப்புகள்' தான் என்றும் இவை எல்லாம் பொதுவாக பாகிஸ்தானின் ஆக்ரமிப்பு மனோபாவங்களால் ஏற்பட்டவையே என்றும் நேரு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில்: "ஆனுல், எப்பொழுதும் குறையெல்லாம் மாற்ருர் பக்கமே இருப்பதாக நான் கூறத் தயாராயில்லை. சில சமயங்களில் இந்தியப் பகுதியிலுள்ள மக்களும் தவறு செய்து விடுகிருர்கள்.

"பாகிஸ்தானைப் பொறுத்த வரையில் இன்னெரு கஷ்டம் என்னவென்ருல் ராணுவச் சட்டம் பிறப்பிக்கப்படுவதற்கு முன்பும் அதற்குப் பின்பும் அந்த நாடு 'குறிப்பிடத்தக்க' அளவு ராணுவ உதவியை வெளி நாடுகளிடமிருந்து பெற்று வந்திருக்கிறது. பாகிஸ்தானில் உள்ள பெருந் தலைவர்களின் கருத்துப்படி இந்த ராணுவ உதவி இந்தியாவுக்கெதிராக அவர்களுக்கு மிகவும் தேவைப்படுகிறது.

"பாகிஸ்தானுடன் சண்டை மூளும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனுல் இதைப்பற்றி யாரும் அலட்சியமாயிருக்க முடியாது என்பது உண்மை. இந்த ராணுவ உதவி காரணமாக நாம் புதிய பொறுப்புகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது; புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியுள்ளது" என்று கூறினர்.

சென்ற வார விமர்சனம்

மணிலா பயிறு எண்ணெய் மார்க்கெட் முதலில் இறங்கி பின்னர் ஏற்றம்

"கிப்" மார்க்கெட்டில் விலைகள் அதிகம்

தென்னுற்காடு ஜில்லாவிலுள்ள விழுப்புரம், திருவண்ணுமலை, திருகோயிலூர் முதலிய பகுதிகளிலும் வட ஆற்காடு ஜில்லா மறற பகுதிகளிலும் புது சரக்கு மணிலாப் பயிறு அதிகமாக வந்துகொண்டிருக்கின்றன. பருவ மழையின் காரணமாக பயிறு உற்பத்தி அதிகமாகி வரத்தும் அதிகமாகி மணிலா எண்ணெய் உற்பத்தி செய்யும் ஆலைகள் விடாமல் வேலை செய்வதால் அவர்கள் "ரெடி" சமீப "டெலிவரி"க்கு மணிலா எண்ணெய் விற்க முன்வருகிருர்கள். சென்னையில் தினமும் சுமார் 750 மூட்டைகள் மணிலாப்பயிறு வந்தன. வார முதலில் பாரம் 1க்கு ரூ. 158 ஆக ஆரம்பித்து மத்தியில் 148 ஆக ஒரே அடியாக இறங்கி பின்னர் வார கடைசியில் நிலைமை கொஞ்சம் திருப்தி ரூ 150 ஆக காணப்பட்டது.

மணிலாப்பயிறு புது சரக்கு அதிகமாக வருவதாலும், பம்பாய் மணிலா எண்ணெய் மார்க்கெட்டில் கீழ் நோக்கமாக காணப்பட்டாலும் சென்னை மணிலா எண்ணெய் மார்க்கெட்டில் வார முதல் பகுதியில் விலைகள் குறைந்தது. வார முதலில் ரெடி எண்ணெய் 318 ஆக ஆரம்பித்து வார மத்தியில் ரூ 302 ஆக இடிந்து பின்னர் சனியன்று ரூ 308 ஆக ஏறியுள்ளது. கல்கத்தா உள்ளூர் வனஸ்பதியாளர்கள் 'ரெடி" டிச. முதல் இரண்டாவது டெலிவரிக்கு திருவண்ணுமலை, திருக்கோயிலூர், விழுப்புரம் முதலிய விலைகளிலும் சென்னையிலும் மிதமான எண்ணெய் வாங்கினுர்கள்.

சென்னை "பெரியமட்" தோல் மார்க்கெட்டில் திரேஸ் மாறு வரத்து குறைவாகவே இருந்தது ஏற்றுமதிக்காரர்கள் கூடின விலை கொடுத்து சரக்குகளை வாங்கினுர்கள். லண்டனிலிருந்து அபிவிருத்தியான விலைகளில் கேள்விகள் அதிகமாக வந்ததால் சென்னையில் 'கிப்" தோல்களில் விலை ராத்தல் 1க்கு 6 முதல் 9 நயா பைசா வரையில் உறுதியாகவே இருந்தன. வட இந்திய வியாபாரிகள் யு. கே. நிலவரத்தைவிட அதிக விலை கொடுத்து வாங்க சிரத்தை காட்டுவதால் மட்ட ஐந்தாந் தரத்திற்கு தொடர்ச்சியாக கிராக்கி இருந்தது. திரேஸ் கண்மாறு திரேஸ் கண்எறு உறுதியாகவும் விலைகள் உயர்வாகவும் இருந்தன. திரேஸ் எறு மாறுதலின்றி இருந்தது.

லண்டன் ஏற்றுமதி பேரத்தில் அதிக கேள்விகளிலிருந்தும் யு. கே. வியாபாரிகள் ரா. 1க்கு 1 முதல் 2 பெ. வரை கூடுதலாகவே கொடுக்கத் தயாராகயிருந்தும் பேரம் ஒரே சீராக நடைபெறவில்லை. சரக்கு சப்ளை குறைவாகயிருப்பதாலும் இந்திய விலைகள் உயர்வாக இருப்பதாலும் தற்சமயம் யு. கே. நிலவரங்களில் ஆர்டர்களை பிடிக்க சென்னை ஏற்றுமதியாளர்கள் தயங்குகிருர்கள். திரேஸ் கண் மாறு கண் எறுவுக்கு விலை அபிவிருத்தியுடன் சுமாரான தேவை இருந்தது.

நீர் மட்டம்

சென்னை, டிச. 8—

மேட்டூர்	110·3 அடி	(8-12-58)
பாபநாசம்	89·2 அடி	(6-12-58)
பெரியாறு	33 5 அடி	(7-12-58)

மார்க்கெட் நிலவரம்

தங்கம், வெள்ளி

சென்னை, டிச. 9—

[illegible]பரன்	ரூ. 74- 8 0
[illegible]ங்கம் (ரெடி)	ரூ. 115- 0-0
[illegible]சை தங்கம்	ரூ. 112 12 0
[illegible]வள்ளி 100தோ.எடை	196 8 0
வெள்ளி 1 ரூ. எடை	ரூ. 2-0-0

மணிலாப் பயறு

531 ரா. கொண்ட பாரம் (விற்பனை வரி உள்பட) 1-க்கு புது சரக்கு ரூ. 150, முதல் ரூ 151 வரை.

மணிலா எண்ணெய்

500 ரா. கொண்ட பாரம் 1-க்கு எக்ஸ்பெல்லர் ரெடி மதராஸ் கிடங்கு டெலிவரி

(மொத்த விலை) ரெடி	ரூ 307 00
டிசம்பர்	ரூ. 303-00
ஜனவரி	ரூ. 304-00
பிப்ரவரி	ரூ. 303

விளக்கெண்ணெய்

(500 ரா. பாரம் 1-க்கு) மதராஸ் கிடங்கு டெலிவரி (3% F. F. A.)

திருப்பத்தூர்	ரூ. 320-00
சேலம் தாமரை அன்னம் 37½ ராத்தல் டின் 1-க்கு	26-00

தேங்காய் எண்ணெய்

37½ ரா. டின் 1-க்கு

எம். எஸ் மார்க்கு	ரூ 42-00
அம்பு மார்க்கு	ரூ 41-25
[illegible] மார்க்கு	ரூ. 41-25

சர்க்கரை

[illegible]ப்பூரு (2 அந்தர்)	108-50

கடன் கொடுத்தவர்களின் நலனை பாதுகாக்க வேண்டியதே சட்டம்

சென்னை உயர்நீதி மன்றத் தீர்ப்பு

சென்னை, டிச. 8—

கோவை காளேஸ்வரா மில்லை நடத்துவதற்கு ரூ. 3 லட்சம் டிபாசிட் கட்டுவதற்கு யாரும் முன்வராததினுல், மில்லைக் கலைத்துவிட வேண்டியதுதான் என்று இன்று ஹைகோர்ட் நீதிபதி திரு. என். ராஜகோபால அய்யங்கார் தீர்ப்புக் கூறினர்.

காளீஸ்வரா மில்லை விற்கவும், விற்றுக் கிடைத்த பணத்தை கடன்காரர்களுக்கு வினியோகிக்கவும் ஆன காரியாதிகளைக் கவனிப்பதற்காக ஒரு தற்காலிக காரியஸ்தரை (லிக்விடேட்டரை) நியமித்துள்ளதாக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி கனம் என். ராஜகோபால அய்யங்கார் இன்று அறிவித்தார்.

மில்லைத் திறந்து நடத்த முன் வருவதாக கோர்ட்டார் முன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த திட்டமானது, அவசியமான சில சோதனைகளைப் பூர்த்தி செய்யாத காரணத்தினுல் ஏற்பட்டுள்ள இந்த நிலைமையில், முன்னர் மூன்று நிர்வாகஸ்தர்களை நியமித்துள்ள உத்தரவு செல்லுபடியாகாது என்றும் நீதிபதி கருதினர்.

தற்காலிக லிக்விடேட்டரின் அறிக்கை மீது, மில்லைப் பற்றிய இதர விவகாரங்கள் கவனிக்கப்படும்.

3 லட்சம் ரூபாய் தர யாரும் முன் வரவில்லை

மில்லையெடுத்து நிர்வகிப்பதாக முன்வந்த எவருமே, கடன் கொடுத்தவர்களுக்கு கடனைத் திருப்பிக் கொடுப்பதற்காக 3 லட்சம் ரூபாய் டிபாசிட்டாகக் கோர்ட்டில் கட்ட முன்வரவில்லையென்று நீதிபதி அறிவித்தார்.

இந்த மில்லின் பங்குதாரர் ஒருவர், சென்ற வருடம் ஜெனரல் மானேஜர் உட்பட டைரக்டர் போர்டு முழுவதையும் நீக்க வேண்டுமென்றும், நீக்கிவிட்டு நிர்வாகஸ்தர்களின் (அட்மினிஸ்ட்ரேட்டர்ஸ்) போர்டு ஒன்றை நியமிக்கப்படவேண்டு மென்றும் மனுச் செய்திருந்தார். அந்த மனுவில், டைரக்டர்களும் குறிப்பாக ஜெனரல் மானேஜரும் மில்லைத் தவருன முறையில் நடத்துவதாகவும், ஒழுங்கற்ற முறையில் நடந்துகொள்ளுவதாகவும் கூறப்பட்டிருந்தது.

மனுவில் கண்ட குற்றச்சாட்டுகள் முழுவதையும் பரிசீலித்த நீதிபதி கனம் சுப்ரமண்யம் அவர்கள், இடைக்கால நிர்வாகஸ்தர்களாக 3 பேர்களை இரண்டு ஆண்டுகளுக்கு மில்லை நிர்வகிக்க நியமித்தார். இதுபற்றிய முடிவான உத்தரவு 1958 ஆகஸ்டு 22ல் நிறைவேற்றப்பட்டது.

இரண்டு நிர்வாகிகள் ராஜினுமா செய்தனர்

இந்த 3 இடைக்கால நிர்வாகஸ்தர்களில் 2 பேர் ராஜினுமா செய்துவிடுவதாகவும், அதற்கு அனுமதிக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டபடியால், இப்பொழுது ஒருவரே பகுதி நேர நிர்வாகம் நடத்தி வருகிருர்.

அந்த நிர்வாகஸ்தர் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டதாவது: "மில்லை நடத்த போதிய பணம் இருக்குமேயானுல், மில்லை நடத்த முடியுமென்றும், கடன் கொடுத்தவர்கள் தங்கள் கோரிக்கைகளை தற்சமயம் வற்புறுத்தாமலிருந்தால் மில்லை நடத்தும் பொறுப்பை முதலீடுக்காரர்கள் ஏற்று நடத்த முடியும்."

முதலில் புழனிச்சாமி கவுண்டர் கொடுத்த யோசனையில் இதனுடைய சாத்தியக் கூறுகளையும் பணம் பெறுவதற்கான வழிகளையும் பற்றி கூறியிருந்தார், மற்றும் 3 ஆலோசனைகள் கோர்ட் முன் சமர்ப்பிக்கப்பட்டன. ஒன்று சென்னை ராஜ்ய சர்க்கார் கொடுத்த யோசனை. இரண்டாவது கருமுத்து தியாகராஜ செட்டியாரின் யோசனை. மூன்ருவதாக கோயமுத்தூர் ஜி. கிருஷ்ணனின் யோசனை.

மில்லையெடுத்து நடத்த முன் வருகிறவர்கள், கடன் கொடுத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டிய கடனையும் செலுத்தக் கூடியவராக இருக்கவேண்டும்; குறிப்பாக கடன் கொடுத்தவர்களிலும் பாதுகாப்பு இல்லாதவர்களுக்கு முதலில் பணம் கொடுக்கவேண்டும். இவர்களிலொருவர் கோர்ட் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முறைப்படி மில்லை, தொடர்ந்து நடத்தினுல், தாங்கள் கொடுத்த கடன் தொகை திருப்பிக் கிடைக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லையே யென்று கவலை தெரிவித்திருந்தார். மேலும் இன்றுள்ள மோசமான நிலைமையைவிட, மில்லை நடத்தினுல் இன்னும் நிலைமை மோசமாகி விடும் என்றும் தெரிவித்தார்.

கடன் கொடுத்தவர்களின் நலவுரிமை காக்கப்படும்

இந்த நிலைமையில் மில்லைத் திறக்க வேண்டுமென்றும் தொழிலாளிகளுக்கு மீண்டும் வேலை கொடுக்க வேண்டுமென்றும் கூறும் யோசனை மீது எவ்வளவு அனுதாப மிருந்தபோதிலும், கடன் கொடுத்தவர்களின் நலவுரிமைகளுக்கு விரோதமான எந்தத் திட்டமும் சட்ட பூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்று நான் நினைக்கிறேன்.

இந்தக் காரணத்தால், இதுவரை கோர்ட்டுக்கு முன்னுல் வைக்கப்பட்டுள்ள எந்தத் திட்டமும் திருப்திகரமானதல்ல ஆகவே நான் அவைகளை நிராகரிக்கிறேன் என்ருர் நீதிபதி ராஜகோபாலன்.

ராஜினுமா செய்ய அனுமதி கோரிய 2 நிர்வாகஸ்தர்களுக்கும் அனுமதி கொடுக்கப்பட்டது மூன்ருவது நபரின் சர்வீஸ் முடித்துக்கொள்ளப்பட்டது.

தபால் ஊழியர்கள் சம்பளம் வாங்க மறுத்தனர்

அகாரணமாக இடமாற்றம் செய்ததுபற்றி ஆட்சேபம்

மதுரை, டிச. 5—

மதுரை டிவிஷன் தபால் ஆபீஸ்களின் சூப்பிரண்டண்ட் தந்தி-தபால் ஊழியர் சங்கத்தின் நான்கு ஊழியர்களை இடமாற்றம் செய்ததை ஆட்சேபித்து மதுரை நகரக் கிளையைச் சேர்ந்த மூன்ரும் வகுப்பு தபால் ஊழியர்கள் டிசம்பர் 1ந் தேதி சம்பளம் வாங்க மறுத்தார்கள்.

அகாரணமாக மாற்றம் செய்யப்பட்டதை ஒட்டி ஊழியரிடையே பெரிய அதிருப்தி ஏற்பட்டுள்ளது. தந்தி-தபால் டைரக்டர் ஜெனரல் உத்தரவை மீறிய நடவடிக்கை இது என்று சுட்டிக் காட்டப்பட்டது.

இந்த நடவடிக்கையை கண்டித்து சங்கத்தின் மகா சபைக் கூட்டம் நடைபெற்றது. மதுரை டிவிஷன் சூப்பிரண்டண்ட் எடுத்த நடவடிக்கை டைரக்டர் ஜெனரல் உத்தரவை மீறியிருப்பதுடன் தொழிலாளர் நிர்வாகத்தின் நல்லுறவைப் பாதிப்பதாக இருக்கிறது என்றும், உடனே இந்த மாறுதல் உத்தரவை ரத்துச் செய்ய வேண்டும் எனவும் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது.

சம்பள மறுப்பை வெற்றிகரமாக நடத்திய ஊழியர்களுக்குப் பாராட்டுதல் தெரிவிக்கப்பெற்றது.

அகில இந்திய தபால் ஆடிட் அக்கவுண்ட்ஸ் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆர் கே. ஜோசப் நிர்ப்பந்தமாக ஓய்வெடுக்குமாறு உத்தரவிடப்பட்டிருப்பதையும் கண்டித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சந்திரனுக்கு அனுப்பப்பட்ட அமெரிக்க ராக்கெட்

சஹாராவில் விழுந்தது

வாஷிங்டன், டிச. 7—

சந்திரனை அடைவதற்கோ அல்லது சூரியனைச் சுற்றுவதற்கென்றோ நம்பிக்கையுடன் நேற்று அனுப்பப்பட்ட மூன்ருவது முயற்சியான அமெரிக்க ராணுவத்தின் கிரகம் 66,654 மைல்கள் வான வெளியில் சென்று மறுபடியும் பூமியை நோக்கி வந்து லிபியாவிற்குத் தெற்கே சஹாரா பாலைவனத்தில் விழுந்து விட்டதாக வானவெளி குழு அறிவித்திருக்கிறது.

துறைமுக டிரஸ்ட் போர்டில் ஏ. எஸ். கே. உறுப்பினரானர்

சென்னைத் துறைமுக ஐக்கியத் தொழிலாளர் சங்கத்தின் மாபெரும் வெற்றி

சென்னை, டிச. 8—

தோழர் ஏ. எஸ். கே. அய்யங்காரை சென்னைத் துறைமுக டிரஸ்ட் போர்டு உறுப்பினராக மத்திய அரசாங்கம் நியமித்துள்ளது.

ஏற்கனவே, 'டாக்லேபர் போர்டு' உறுப்பினராக ஏ. எஸ். கே. அய்யங்கார் இருந்து வருகிருர்.

சென்னைத் துறைமுக ஐக்கியத் தொழிலாளர் சங்கத்தின் தலைவரான ஏ. எஸ். கே. அய்யங்கார், துறைமுக டிரஸ்ட் போர்டு உறுப்பினராக நியமிக்கப்படவேண்டுமென மக்கள் சபை உறுப்பினர்களான தோழர்கள் எஸ். ஏ. டாங்கே, கே. டி. கே. தங்கமணி முதலியோர் தொடர்ந்து மிகத் தீவிரமாக வற்புறுத்தி வந்ததன் காரணமாக மத்திய அரசாங்கம் சென்னைத் துறைமுக ஐக்கியத் தொழிலாளர் சங்கம் பெரும்பான்மையோரின் பிரதிநிதித்துவம் உடையது தானு என்று அறியப் பலதடவை சங்க தஸ்தாவேஜுகளைப் பரிசீலனை செய்தது. சங்கம் பெரும்பான்மையான தொழிலாளரின் பிரதிநிதித்துவம் உடையது எனக் கண்டறிந்த பின்னரே தோழர் அய்யங்காரை சென்னைத் துறைமுக டிரஸ்ட் போர்டு உறுப்பினராக நியமனம் செய்து அரசாங்கம் உத்திரவு பிறப்பித்துள்ளது.

இந்த நியமனத்தை சென்னைத் துறைமுக ஐக்கியத் தொழிலாளர் சங்கமும் மதராஸ் ஹார்பர் தொழிலாளர் சங்கமும் மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்கின்றன. நியமனச் செய்தி அறிந்த தொழிலாளர்கள் துறைமுக விஸ்தரிப்பு, போர்ட் டிரஸ்ட் தொழிலாளர் கோரிக்கைகள்பற்றிய பிரச்னை ஆகியவற்றுக்காக சென்னைத் துறைமுக டிரஸ்ட் போர்டில் தோழர் அய்யங்கார் போராட வேண்டுமென்று கூறி மாலை அணிவித்துப் பாராட்டிச்சென்றனர்.

காசி சர்வகலாசாலை திறக்கப்பட்டது

வாரணசி, டிச. 8—

கடந்த அக்டோபர் 8ல் மூடப்பட்ட காசி ஹிந்து சர்வகலாசாலையின் ஒரு பகுதி இன்று திறக்கப்பட்டது.

மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்ட மேற்படி சர்வகலாசாலை விசாரணைக் கமிட்டியின் அறிக்கையிலிருந்த சில வாசகங்களை ஆட்சேபித்து மாணவர்கள் நடத்திய கிளர்ச்சி நிமித்தமாகவே சர்வகலாசாலை மூடப்பட்டது நினைவிருக்கும். சர்வகலாசாலை காம்பவுண்டுக்குள் ஆயுதந் தாங்கிய போலீஸ்காரர்கள் காவல் புரிந்தனர்.

ஜில்லா மாஜிஸ்ட்ரேட், 144 தடையுத்தரவுபிறப்பித்துள்ளார்.

டிகாலின் தூதுவர் இந்தியாவைவிட்டு டோக்யோ பயணம்

புதுடில்லி, டிச. 8—

பிரெஞ்சுப் பிரதம மந்திரி டிகாலின் சொந்தத் தூதுவர் ஆண்ட்ரீ மால்ரோ இந்தியாவில் தன் சுற்றுப்பயணத்தை யெல்லாம் முடித்துக்கொண்டு இன்று டில்லியைவிட்டு டோக்யோவுக்குப் புறப்பட்டார்

அவர் டில்லியில் ஒருவாரம் தங்கியிருந்து பிரதமர் நேருவுடனும் இதர மந்திரிகளுடன் சம்பாஷணைகள் நடத்தினுர்.

ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிலாளருக்கு உதவுக
தொழிற்சங்க வேண்டுகோள்

தாம்பரம், டிச. 8—

தாம்பரம் ஸ்டாண்டர்டு மோட்டார் கம்பெனி தொழிலாளர்களில் ஆட்டோ இன்ஜினீரிங் தொழிற் சங்கத்தின் 247 தொழிலாளிகள் நிர்வாக[illegible]தால் பழிவாங்கப்பட்ட[illegible] விஷயம் அறிந்ததே. [illegible]ள்ள தொழிலாளர்கள்[illegible] தவிர 43 ஒரு வழக்கை[illegible] போலீஸார் [illegible]னர். இவ[illegible] தொடுத்துள்ள நடத்து[illegible]களின் வழக்குகளை [illegible]திற்காக ஆட்டோ இன்ஜினீரிங் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் சென்னை நகரில் [illegible]-12-58 முதல் நிதி வசூல் செய்வார்கள். சகல தொழிலாளர்களும் பொது மக்களும் ஆதரவு தருமாறு சங்கத்தின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

"பலூசி காந்தி"க்கு 14 வருட கடுங்காவல்!

கராச்சி, டிச 8—

"பலூசி காந்தி" என்றழைக்கப்படும் கான் அப்துல் சமத் கான் இன்று குவெட்டாவில் பாகிஸ்தான் விசேஷ ராணுவக் கோர்ட்டினுல் 14 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டார்

அரசாங்கத்திற்கு விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக அவர் மீது குற்றம் [illegible]டப்பட்டிருந்தது.

போலீஸ் நடைமுறை பற்றி இ. எம். எஸ்.

கட்டுமீறிய, தவிர்க்க முடியாத நிலைமையிலேயே கடும் நடவடிக்கை

திருவனந்தபுரம், டிச. 8—

உண்மையிலேயே பலாத்காரம் ஏற்படும் அல்லது முயற்சிக்கும் சந்தர்ப்பங்களில் எப்பொழுது எப்படி பாதுகாப்பளிக்கவேண்டுமென்று அவ்வப்பொழுது போலீஸாருக்கு குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சட்டசபையில் கேள்வியொன்றுக்கு பதிலளித்த முதல் மந்திரி இ. எம் எஸ். கூறினுர்.

இவ்வாறுன குறிப்புகள் அத்தனையையும் சேகரிப்பது இயலாத காரியம் என்று கூறி போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் விடுத்த ஓர் சுற்றறிக்கையை சமர்ப்பித்தார். அதில் கண்டுள்ளபடி தவிர்க்க முடியாத, கட்டுமீறிய சந்தர்ப்பங்களில், அல்லாது துப்பாக்கிப் பிரயோகமே கூடாது என்றும், தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் போலீஸாரின் கடமை பற்றியும் கூறப்பட்டிருந்தது. தவருன பிடிவாதத்தைக் கடைப்பிடிக்கும்போது நிர்வாகத்தினரையும் தொழிலாளர், அவர்களின் தலைவர்களைப் போலீஸார் அணுகி, போலீஸார் தலையிடாத நிலைமையின் தேவையை அவர்களுக்கு எடுத்துரைத்து இருபாலாரையும் கவர வேண்டும் என்றும், இம்முயற்சி பயனளிக்காவிட்டால மறியல் செய்வோரை அப்புறப்படுத்துவது, இதற்கப்புறமும் எல்லாவகை எச்சரிக்கைகள், நியாயமான இதர முறைகளுக்கப்புறமே நிர்ப்பந்தத்தை மேற்கொள்ளவேண்டும் என்று அந்த சுற்றறிக்கை கூறுகிறது. மேலும் சம்பந்தப்பட்டவர்கள் மற்ற எல்லா வழிகளையும் ஏற்றுக்கொள்ளாமல் போலீஸின் கடும் நடவடிக்கையைத் தூண்டுபவர்களாயிருந்தால், அதை ஏற்றுக்கொள்ளவும் தயாராயுள்ளனர் என்ற நிலைமையையும் சம்பந்தப்பட்டவர்கள் உணரும்படி விளக்க வேண்டும்.

பொதுவாக தந்திரத்தாலும், பலாத்காரமின்றி சமாதான முறையில் இருபாலாரையும் வசப்படுத்தி பலாத்காரமின்றி ஒரு முடிவிற்குக் கொண்டுவர செய்யும் முயற்சிக்கே மதிப்பளிக்கப்படும், எனவே தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களின்றி கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாதென்று அச்சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கேரளத்திலுள்ள மத்திய சர்க்கார் அரிசி சேமிப்புகள்

வேறு ராஜ்யங்களுக்கு அனுப்பப்படுகிறது!

திருவனந்தபுரம், டிச. 8—

கேரளத்தில் உணவு நெருக்கடியுள்ள சந்தர்ப்பத்தில் அக்டோபர் மாதத்தில், மத்திய சர்க்கார் கேரளத்தில் சேமித்து வைத்துள்ள கிடங்குகளிலிருந்து வேறு மாகாணங்களுக்கு அரிசியை அனுப்பி வருவதாகப் பத்திரிகைகளில் வந்த செய்தியைக் குறிப்பிட்டு இது விஷயத்தை ராஜ்ய அரசாங்கம் அறியுமா என்றும் இவ்விஷயத்தை மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதா என்றும் ஒரு கம்யூனிஸ்ட் அங்கத்தினர் கேட்ட கேள்வியொன்றிற்கு உணவு மந்திரி ஜார்ஜ் கீழ்க் கண்டவாறு பதிலளித்தார்.

"மத்திய சர்க்காரின் கவனத்திற்கு இச்செய்தி கொண்டு வரப்பட்டது. ஆனுல் இதுவரை யாதொரு பதிலும் கிடைக்கவில்லை" என்றும் அவர் கூறினுர்.

இடைமறித்து காங்கிரஸ் அங்கத்தினர் "அந்த அரிசி வெளி நாட்டிலிருந்து மத்திய சர்க்காரால் இறக்குமதி செய்யப்பட்டு சேமிக்கப்பட்டதா?" என்று கேட்டார். எங்கிருந்து கொண்டு வந்து சேமிக்கப்பட்டது என்று தமக்குத் தெரியாதென்று மந்திரி பதிலளித்தார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த நிதி மந்திரி அச்சுத மேனன், இதுவரை 52 கூட்டுறவு விவசாய ஸொஸைட்டிகளிலிருந்த போதிலும் விவசாயிகள் கூட்டு முறையான விவசாயத்தில் அதிக உற்சாக முள்ளவர்களாகக் காணப்படவில்லை என்று கூறினுர்.

தேவர் எதிர்வழக்குக் கமிட்டி

சென்னை, டிச 6—

திரு. உ. முத்துராமலிங்கத் தேவர், எம்.பி., மீதுள்ள வழக்கை நடத்துவதற்காகத் திருவாளர்கள் வி. கே. ராமசாமி முதலியார் எம்.எல்.ஏ., எச்.டி.ராஜா எம்.பி. டி. எல். சசிவர்ணத் தேவர் எம். எல். ஏ., காளமேகம், எம். எஸ். சிங்கராயன் ஆகியோர் கொண்ட கமிட்டியொன்று அமைக்கப்பட்டிருக்கிறதென்றும் இதற்குப் பொதுமக்கள் பொருளுதவி புரிய வேண்டுமென்றும் இந்திய தேசிய ஜனநாயகக் காங்கிரஸ் தலைவர் திரு. கே.எஸ். வெங்கிடகிருஷ்ண ரெட்டியார் அறிவித்திருக்கிருர்.

தி. மு. க விலிருந்து ராஜிநாமா

துறையூர், டிச. 7—

திருச்சி ஜில்லா முசிறி தாலூகா வைரிசெட்டி பாளையம் தி. மு. க. கிளை செயற் குழு உறுப்பினர் பதவியையும், அங்கத்தினர் பதவியையும் தோழர் கே. பெத்து அவர்களும், கிளை பொருளாளர் பதவியையும் அங்கத்தினர் பதவியையும் தோழர் பெ. கிருஷ்ணசாமி அவர்களும் ராஜிநாமாச் செய்துள்ளனர்.

வைரிசெட்டி பாளையம் கிராம தி. மு. கழகம், பஞ்சாயத் போர்டு இடைத் தேர்தலில் மக்கள் நலனில் அக்கறை இல்லாத மாற்றுக் கட்சிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு வேலை செய்யாதிருந்ததால் அவர்கள் தமது பதவிகளையும், அங்கத்தினர் உரிமையையும் 28-11-58ந் தேதியுடன் ராஜிநாமா செய்துள்ளனர்.

ஜனவரி மத்தியில் டிட்டோ இந்தியா விஜயம்

புது டில்லி, டிச. 8—

யுகோஸ்லாவிய ஜனதிபதி மார்ஷல் டிட்டோ, வரும் ஜனவரி மத்தியில் புது டில்லிக்கு விஜயம் செய்வார், என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மார்ஷல் டிட்டோ [illegible] இந்தியா[illegible] வில் ஒரு வார கா[illegible] பார் என்று [illegible] தங்கியிருப்[illegible] தெரிகிறது.

திரைப்பட கலைஞர்களுக்குத் தோழமைக் கழகத்தினர் விருந்து

மதுரை, டிச. 3—

மதுரை உடுப்பி போர்டிங் விடுதியில் நாடோடி மன்னன் திரைப்படத்தின் 100வது நாள் விழா கொண்டாடப்பட்டது. மதுரை தோழமை கழகத்தினர் விருந்தளித்தனர். விழாவினுக்கு மா. நடராசன் தலைமை வகித்தார். பெ. பகவதி, அழகர்சாமி ஆகிய இருவரும் எல்லோரையும் வரவேற்றனர்.

வானொலி

சென்னை 1

11—12—58

காலை முதல் ஒலிபரப்பு

7-00 துதிப்பாடல்கள் (திருச்சி அஞ்சல்) 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் வானிலை அறிவிப்பு, 7-15 தமிழில் செய்தி, 7-30 பாலையூர் கே. வெங்கட்ராமன் பாட்டு 8-15 ஒலிபரப்பு முடிவு.

இரண்டாவது ஒலிபரப்பு

12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 மஹிளா மண்டலி 1-30 குரல் வகை, 1-40 ஹிந்தியில் செய்தி, 1-50 சாஸ்த்ரீய சங்கீதம் 2-00 தமிழில் செய்தி, 2-10 உயர் தரப் பள்ளிகளுக்கு 2-40 வானிலை அறிவிப்பு ஒலிபரப்பு முடிவு.

மாலை மூன்ருவது ஒலிபரப்பு

5-30 பி. கே. மதுரை நாகஸ்வரம் 6-05 பிராந்தியச்செய்திகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் (திருச்சி அஞ்சல்) 7-15 தமிழில் செய்தி, 7-30 தேசிய ஒருமை நாட்டியம் வி. பி. ராமையா பிள்ளையுடன் பேட்டி 7-40 இடைவேளை 7-45 ராகம், தானம், பல்லவி முடிகொண்டான் வெங்கட்ராமய்யர் பாட்டு 8-30 நேயர் விருப்பம் 9-00 ஹிந்துஸ்தானி இசை 9-30 அகில பாரத நாடக நிகழ்ச்சி தமிழ் 10-30 வானிலை அறிவிப்பு ஒலிபரப்பு முடிவு.

திருச்சி

11—12—58

காலை முதல் ஒலிபரப்பு

7-00 இசைக்கதிர், 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் 7-15 தமிழில் செய்தி, 7-30 இந்திரா வெங்கடரத்னம் பாட்டு 8-00 ஆங்கிலத்தில் செய்தி, 8-15 ஒலிபரப்பு, முடிவு.

இரண்டாவதுஒலிபரப்பு

12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம் 1-40 ஹிந்தியில் செய்தி 1-50 வாத்ய கோஷ்டி 2-00 தமிழில் செய்தி, 2-10 உயர் தரப் பள்ளிகளுக்கு 2-40 இடைவேளை 2-45 வானிலை அறிவிப்பு ஒலிபரப்பு முடிவு.

மாலை மூன்ருவது ஒலிபரப்பு

4-45 விவித பாரதி 5-45 இசைப்பயிற்சி, 6-00 அறிவிப்புகள், 6-05 பிராந்தியச் செய்திகள், 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7-15 தமிழில் செய்தி, 7-30 தேசிய ஒருமை பேச்சு (மதராஸ் 1-ல் உள்ளபடி) 7-40 இம்மாதப் பாடல் 7-45 ராகம், தானம், பல்லவி முடிகொண்டான் வெங்கட்ராமய்யர் பாட்டு 8-30 டெல்லியில் உள்ளபடி 8-40 சித்ர கானம் 8-55 இடைவேளை 9-00 ஆங்கிலத்தில் செய்தி 9-15 சுபத்த சங்கீதம் 9-30 அகில பாரத நாடக நிகழ்ச்சி தமிழ் 10-30 ஒலிபரப்புமுடிவு.

ஜனசக்தி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டவர்: எஸ். கிருஷ்ணசாமி
ஆசிரியர்: ப. ஜீவானந்தம்.
முகவரி: 32, பிராட்வே சென்னை-1.
Janasakthi Press,
32, Broadway, Madras-1.